Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்




ஒறிஜினல் கோலம் சாறி, பட்டு வேட்டிகள், கோலம் கூறை சாறிகள், பட்டு வேட்டி வகைகள் மற்றும் றெடிமெட் ஆடைகள், பல்வேறு ரக துணி வகைகள், பிளவுஸ் துணி வகைகள் யாவற்றுக்கும் வருகை தாருங்கள்

சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்

41, பெரிய கடை, யாழ்ப்பாணம். (சி-551)

T.P.No. 222 2063

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 மாசி 12 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 துல்ஹிஜ்ஜா 21 (24.02.2003) திங்கட்கிழமை இதழ் :145


கிளிநொச்சியில் தமிழ்செல்வன் - கூட்டமைப்பு எம்.பிக்கள் சந்திப்பு.

# புலிகளுடன் நெருக்கமான உறவை தொடர்ந்து பேண கூட்டமைப்பு உறுதி

## கிளிநொச்சி சந்திப்பில் பல விடயங்களும் ஆராய்வு

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்ந்தும் நெருக்கமான உறவுகளைப் பேணுவதென்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் உறுதி வழங்கியுள்ளனர் என்று தெரிவிக்கப் படுகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குமிடையில், நேற்று கிளிநொச்சி அரசியற்துறை நடுவப் பணியகத்தில் நடைபெற்ற விசேட சந்திப்பின்போதே இந்த உறுதி வழங்கப்பட்டதாகத் தெரியவருகின்றது.

விடுதலைப் புலிகளின் அரசியற் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் தலைமையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பின்போது, பல்வேறு

(10 ஆம் பக்கம் பார்க்க)


சந்திப்புக்குச் செல்லும் கூட்டமைப்பினர்.

# திருமலையில் புலிகள் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் போராளிகளைச் சுற்றிவளைத்த கடற்படையினர்!

## முற்றுகையிலிருந்து மீட்க புலிகள் வியூகம்; 8 மணிநேரத்தின் பின்பே பதற்றம் தணிவு!

(திருகோணமலை)

**திருகோணமலையில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள கல்லம்பற்றைப் பகுதிக்குள் ஊடுருவிய கடற்படையினர், அங்கு - விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் எழுவரை வழிமறித்துக் கைதுசெய்ய முயன்றபோது- எட்டு மணி நேரம் பதற்றமான நிலை அங்கு நீடித்தது. எனினும், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலையீட்டினால் நிலைமை நேற்றிரவு சுமுகமடைந்தது.**

இது பற்றித் தெரியவருவதாவது,

திருகோணமலையின் வடக்கே விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதியான கல்லம்பற்றையில் - போர்நிறுத்தத்தின் பின்னர் கடற்படையினர் அடிக்கடி ஊடுருவி வந்துள்ளனர்.

திரியாய்க்குச் செல்லும் இப்பாதை ஊடாக, நேற்று மதியம் 12.30 மணியளவிலும் ட்ராக்டர் ஒன்றில் கடற்படையினர் பலர் ஊடுருவி வந்தபோது - அப்பகுதியில் சென்று கொண்டிருந்த விடுதலைப் புலிகள் ஏழுபேர் கடற்படையினரால் சுற்றிவளைக்கப்பட்டனர்.

ஆயுதந் தரித்திருந்த அப்போராளிகளிடமிருந்து - ஆயுதங்களைப் பறிக்கவும், அவர்களைக் கைது செய்யவும் கடற்படையினர் முயன்றபோது - தம்மை நெருங்கினால் -

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள் எதிர்பார்ப்பு, தேவைகளில் இருதரப்பும் ஒருமித்த கருத்து!

### கூட்டமைப்பு சந்திப்பின் பின் தமிழ்ச்செல்வன்

மக்களுடைய எதிர்பார்ப்புக்கள், மக்களுடைய தேவைகள் பற்றி நாம் ஒருமித்த கருத்தைக் கொண்டுள்ளோம் என, தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்- தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்த பின்பு தெரிவித்தார்.

நேற்றைய சந்திப்பில் - சமாதானப் பேச்சுவார்த்தைகள், அரசியற் சூழ்நிலைகள் எனப் பல்வேறு விடயங்கள் பற்றிக் கலந்துரையாடியதுடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் நாமும் அடிக்கடி சந்திப்புக்களை ஏற்படுத்தி மக்களுடைய நிலைப்பாடுகளைப் பற்றிப் பேசவுள்ளோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## நெடுந்தீவுக்கு படைத்தளபதிகளுடன் அமைச்சர் மிலிந்த திடீர் விஜயம்!

(யாழ்ப்பாணம்)

கடற்படை மற்றும் விமானப்படைத் தளபதிகளுடன் அமைச்சர் மிலிந்த மொறகொட மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ ஆகியோர், நேற்று நண்பகல் நெடுந்தீவுக்கு திடீர் விஜயத்தை மேற்கொண்டனர். இக்குழுவினர் நெடுந்தீவில் கடற்படையுடனும், மற்றும் பொலிஸாருடனும் பேச்சுக்களை நடத்தியதாகவும் தெரியவருகிறது.

நேற்றுப் பிற்பகல் 12.30 மணியளவில் கடற்படைப்படகுகள் மூலம் அமைச்சர் மிலிந்த மொறகொட, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி, விமானப் படைத்தளபதி எயார் வைஸ் மார்ஷல் டொனால்ட் பெரேரா, குடாநாட்டுப் படைத்தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா,

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள் ஜனநாயகப் பேரவையின் அலுவலகத்தில் ஆயுதங்கள் மீட்பு

### கடற்படை சீருடையும் இருந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் உள்ள மக்கள் ஜனநாயகப் பேரவை அலுவலகத்திலிருந்து சட்டவிரோதமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு தொகுதி ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

யாழ். நகரில் முதலாம் குறுக்குத் தெருவில் அமைந்திருந்த மேற்படி அரசியற்கட்சியின் அலுவலகத்தை நேற்றுக்காலை பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து சுற்றிவளைத்தனர். அவ்வலுவலகத்திற்குள் நுழைந்த இராணுவத்தினரும் பொலிஸாரும் அங்கு சல்லடை

(10 ஆம் பக்கம் பார்க்க)



தேடுதல் நடத்தப்பட்ட அலுவலகம்.

### விண்ணாணம் விநாசியர்


மிலிந்த மினக்கெடுறார், விஷயம் ஏதும் இருக்குமோ...?

## கூட்டுப்பயிற்சிகள் குறித்து இந்தியாவுடன் ஆராய்வு!

### கடற்படை அதிகாரிகள் விரைவு

இலங்கைக் கடற்படையின் உயர் அதிகாரிகள் குழுவொன்று இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ளது. கடற்படை அதிகாரிகளின் வழமையான பயணமே இதுவெனக் கடற்படை ஊடகப் பேச்சாளர் கப்டன் ஜயந்த பெரேரா தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான கடற்படைத் தொடர்புகளைப் பலப்படுத்துவது பற்றியும் கூட்டுக் கடற்படைப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

SERENDIB AIRLINE

யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்

021-2223916, 0777-517019, 01-505632, 074-612656, 01-390128.

(சி-512)

# உடத்தலவின்ன வழக்கு தீர்ப்பின்பின்னரே மரணதண்டனை குறித்த இறுதி முடிவு!

மரண தண்டனையை மீண்டும் அமுலாக்குவது தொடர்பான நாடாளுமன்ற விவாதம், அடுத்த மாதம் இடம்பெறவுள்ளதாக உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

இலங்கையில் மீண்டும் மரண தண்டனையை அமுலாக்குவதற்கு ஜனாதிபதி சந்திரிகாவும் ஆதரவு வழங்குவார் என்று அரசாங்கம் நம்புவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டில் அதிகரித்துள்ள பாரிய குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு, மரணதண்டனையை அமுலாக்குவதைவிட வேறுவழியில்லை என்றும் உள்துறை அமைச்சர் தெரிவித்தார்.

அண்மையில் மரணதண்டனை குறித்து நாடாளுமன்றத்தில் விவாதம் இடம்பெற்றபோது - நாடாளுமன்ற உறுப்பினர்கள், மீண்டும் மரண தண்டனையை அமுலாக்குவதற்கு ஆதரவு தெரிவித்திருந்தனர்.

எவ்வாறு மரணதண்டனையை அமுலாக்குவது என்பது குறித்தும் பல்வேறு அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன.

அமைச்சர் கரு ஜெயசூரிய, மின்சாரக் கதிரை மூலம் மரணதண்டனை அமுல்படுத்தப்பட வேண்டும் என்று ஆலோசனை தெரிவித்திருந்தார்.

இதேவேளை- மரணதண்டனையை அமுலாக்குவதற்காக அரசாங்கம் மூன்று தூக்குக்கயிறுகளைக் கொள்வனவு செய்வதற்குத் தீர்மானித்திருக்கின்றது. ஒவ்வொரு கயிறும் 98 ஆயிரம் ரூபாய்க்குக் கொள்வனவு செய்யப்படுவதற்கான கொள்வனவு உத்தரவு வழங்கப்படவிருக்கின்றது.

இலங்கையில் - 1976 ஆம் ஆண்டில்தான் இறுதியாக மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது. போகம்பல, வெலிக்கடைச் சிறைகளிலேயே மரண தண்டனை நிறைவேற்றப்பட்டு வந்தது.

இதேவேளை, கண்டி உடத்தலவின்ன படுகொலை தொடர்பான வழக்கு விசாரணைகள் முடியும் வரை, ஜனாதிபதி சந்திரிகா மரண தண்டனை குறித்த இறுதிமுடிவினை எடுக்கமாட்டார் என்று பொதுஜன ஐக்கிய முன்னணி வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த வழக்கில் ஜெனரல் அனுருத்த ரத்வத்த மற்றும் அவரது இரண்டு மகன்மார் மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருப்பதினாலேயே ஜனாதிபதி இவ்வாறு காலம் தாழ்த்தலாம் என பொதுஜன ஐக்கிய முன்னணி வட்டாரங்கள் தெரிவித்தன.

## கொக்குவில் அணி வெற்றி

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழக அணிக்கும்- பொலநறுவை, கிங்குராங்கொட அலெக்ஸ்சாண்டர் அணிக்கும் இடையில் கடந்த சனிக்கிழமை பொலநறுவை ராஜரட்டை மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற மட்டுப்படுத்தப்பட்ட 40 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டியில் கொக்குவில் சனசமூக நிலைய அணி 29 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

## முன்பள்ளிக்கு புதிய கட்டடம் நிர்மாணம்


(மானிப்பாய்)

வடமராட்சி, மேலைப்புலோலி சதாவதானி முன்பள்ளிச் சிறார்களின் வசதிகருதி, சுமார் ஒன்றரை லட்சம் ரூபா செலவில் தம்பசிட்டியில் புதிய கட்டடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

இலங்கை சர்வோதய நிறுவனம், இவ்வேலைத் திட்டத்திற்கு முன்னோடியாக 75 ஆயிரம் ரூபா நிதியினை வழங்கியுள்ளது. (100)

## 60 வீதமான மாணவர்கள் கணிதபாடத்தில் சித்தியில்லை

### வட-கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர்



திருகோணமலையில் நடைபெற்ற கணிதபாடச் செயலமர்வில் வட-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.தியாகலிங்கம் உரையாற்றுவதையும் அதிகாரிகள் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

(நமது நிருபர்)

வட - கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த 60 சதவீதமான மாணவர்கள் கடந்த வருடம் இடம்பெற்ற க.பொ.த. (சா/த) கணிதபாடப் பரீட்சையில் சித்தியடையவில்லை என்று, திருகோணமலையில் நடந்த கணிதபாடச் செயலமர்வில் வட-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.தியாகலிங்கம் தெரிவித்தார்.

இதற்கு கணிதபாட ஆசிரியர் பற்றாக்குறை மற்றும் உரிய நேரத்தில் பாடப்புத்தகங்கள் வழங்கப்படாமை என்பன காரணமாக இருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்,

இனிமேல் கணிதபாடத்தில் சித்தியடையாமல் க.பொ.த. உயர்தரத்தில் கல்வி கற்க முடியாது. எனவே, கணிதபாடத்தில் கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டும்.

வட - கிழக்கில் உள்ள சில பாடசாலைகளில், ஒரு மாணவர்கூட கணிதபாடத்தில் சித்தியடையவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தமிழீழ விளையாட்டு விழாவில் யாழ், முல்லை அணிகள் தோல்வி

(கிளிநொச்சி)

தமிழீழ தேசிய விளையாட்டு விழாவின் நான்காம் நாள் நிகழ்வு நேற்றுக்காலை ஆரம்பமானது.

தமிழீழத் தேசியக்கொடியை கிளிநொச்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் முரளி ஏற்றிவைத்தார்.

மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்த மாவீரர் நினைவு மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த கேணல் சங்கரின் உருவப்படத்திற்கு விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பாவும்,

லெப்.கேணல் சங்கரின் திருவுருவப் படத்திற்கு மட்டு.அம்பாறை விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் நிலானும்,

மேஜர் அல்பேட்டின் உருவப்படத்திற்கு யாழ்.விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் மாதுளனும்,

மேஜர் சோதியாவின் உருவப்படத்திற்கு அம்பாறை விளையாட்டுத்துறை அதிகாரி அல்ஹாஜ் அப்துல் நௌபரும் ஈகச்சுடரை ஏற்றி அஞ்சலி செலுத்தினர்.

தொடர்ந்து மென்பந்து கிரிக்கெட் போட்டிகள் ஆரம்பமாகின.

ஆரம்பத்தில் முல்லை அணிக்கும், அம்பாறை அணிக்கும் இடையிலான போட்டி இடம்பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய முல்லை மாவட்ட அணி ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 62 ஓட்டங்களைப் பெற்றது. இதில் தர்சன் 25 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார். தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய அம்பாறை அணி 15.5 ஓவர்களில் 5 விக்கெட் இழப்பிற்கு 65 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

தொடர்ந்து, மட்டக்களப்பு அணிக்கும் யாழ். அணிக்கும் இடையில் மென்பந்து கிரிக்கெட் போட்டி ஆரம்பமாகியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மட்டக்களப்பு அணி - 15 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 83 ஓட்டங்களைப் பெற்றது. இதில் உமேஷ்காந்த் 24 ஓட்டங்களையும் விஜயகண்ணா 21 ஓட்டங்களையும் பெற்றனர்.

அதனைத் தொடர்ந்து, துடுப்பெடுத்தாடிய யாழ்.அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 49 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது.

இதேவேளை, நேற்று மாலை உதைபந்தாட்ட அரையிறுதிப் போட்டிகள் நடைபெற்றன. முதலாவது போட்டி மன்னார் - மட்டக்களப்பு மாவட்ட அணிகளுக்கு இடையில் நடைபெற்றது. இதில் மன்னார் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இந்தப்போட்டியில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் செல்வம் அடைக்கலநாதன், சிவாஜிலிங்கம் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

வவுனியா - திருமலை அணிகளுக்கிடையில் நடைபெற்ற இன்னொரு போட்டியில், திருமலை அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இந்தப்போட்டியில் பிரதம விருந்தினராக தென்மராட்சி சிறப்புப் பொறுப்பாளர் வீமன் கலந்துகொண்டார்.

நாளை உதைபந்தாட்ட இறுதிப் போட்டி இடம்பெறும்.


நிறைஞ்சனாஸ் சங்கானை
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
சரத்குமார் (இருவேடம்), மீனா நடித்த
நாட்டாமை
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 காட்சி
M.I. 2
(சி-544)

ராஜா யாழ்ப்பாணம்.
6 ஆவது வாரமாக
விஜய், ஸ்நேகா, மணிவண்ணன், வடிவேல் நடித்த

வசீகரா
2.30, 6.30 மட்டும்
24 முதல் 26 வரை
SPIDER MAN
காலை 10.30 – இரவு 9.30 மட்டும்
(சி-545)


## இடைக்காடு மயானத்தை பொதுமக்கள் பயன்படுத்த அனுமதி

(மானிப்பாய்)

அச்சுவேலி - இடைக்காடு இந்து மயானத்தைப் பொதுமக்கள் பயன்படுத்துவதற்கு இராணுவத்தினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

1990 ஆம் ஆண்டு சிறிலங்கா இராணுவம் இப்பகுதியை உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தியதையடுத்து, இம்மயானத்தைப் பொதுமக்கள் பயன்படுத்த முடியாமல் இருந்தது.

இதனால், பொதுமக்கள் பல சிரமங்களை அனுபவித்து வந்தனர். தற்போது 12 வருடங்களின் பின்னர் இம்மயானத்தைப் பொதுமக்கள் பயன்படுத்தக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. (100)

## அணிசேரா நாடுகளின் மாநாடு இன்று மலேசியாவில் ஆரம்பம்

(கொழும்பு)

அணிசேரா நாடுகளின் மாநாட்டில் பங்குபற்றுவதற்காக, ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நேற்று மாலை மலேசியாவிற்குப் பயணமானார்.

கோலாலம்பூர் சென்றடைந்த ஜனாதிபதியை, அந்நாட்டின் தொழில் அமைச்சர் சிறிசுமாமிவேல் வரவேற்றார்.

அத்துடன், கோலாலம்பூர் விமான நிலையத்தில் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு இராணுவ மரியாதை வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அணிசேரா நாடுகளின் மாநாடு இன்று ஆரம்பமாகவுள்ளது குறிப்பிடத்தக்கது.

## இன்றைய நாள் இனிய நாள்

**24-02-2003 - திங்கட்கிழமை**

| | |
|---|---|
| மேடம் | :- தொழில் சிறப்பு, தாரபுத்திர சுகம், மன மகிழ்ச்சி, இல்லச்சிறப்பு. |
| இடபம் | :- பிரயாணக் கஷ்டம், மனச்சஞ்சலம், குறை கேட்டல், கொடுக்கல் வாங்கல் பிணக்கு. |
| மிதுனம் | :- இனசன விரோதம், பணக்குறைவு, வயிற்றில் ரோகம், மனப்பயம். |
| கர்க்கடகம் | :- மனமகிழ்ச்சி, சத்துரு வெற்றி, சினேகிதரால் கவலை, குடும்பசுகம். |
| சிங்கம் | :- பூமிலாபம், காரிய சித்தி, பொருள் வரவு, தரும காரியம் செய்தல். |
| கன்னி | :- பயனற்ற பிரயாசம், தார புத்திர கஷ்டம், உஷ்ண ரோகம், அதிக செலவு. |

**பிரபல சோதிடர் எஸ்.குகநேசன்**

| | |
|---|---|
| துலாம் | :- தன லாபம், திருடர் பயம், பெண்களால் கஷ்டம், ஏமாற்றம். |
| விருச்சிகம் | :- வாக்கு கலகம், மனக்கவலை, உயர்ந்த நிலை, சௌபாக்கியம். |
| தனு | :- மன மகிழ்ச்சி, புத்திர சுகம், சௌபாக்கியம், பொருள் வரவு. |
| மகரம் | :- சிநேக நன்மை, நற்கீர்த்தி, சுபகாரிய வெற்றி, குடும்ப மகிழ்ச்சி. |
| கும்பம் | :- பொருள் வரவு, மன மகிழ்ச்சி, பூமியால் லாபம், சிநேகிதர் உதவி. |
| மீனம் | :- இனசனக் கொண்டாட்டம், தன தானிய விருத்தி, குடும்ப சந்தோஷம். |

## பொலிஸ் அதிகாரிகள் பதவியுயர்வு பரீட்சை தமிழ்மொழி மூல வினாத்தாளில் குளறுபடி!

பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர்கள் மற்றும் இன்ஸ்பெக்டர்களுக்கு 2002 ஆம் ஆண்டு பொலிஸ் திணைக்களத்தினால் பரீட்சைகள் நடத்தப்பட்டு, 315 பேருக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டது. இந்தப் பதவி உயர்வுகளை நிறுத்துமாறு மனித உரிமை ஆணைக்குழு தடை உத்தரவு வழங்கியுள்ளது.

இந்தப் பதவி உயர்வுப் பரீட்சையில் தமிழ்மொழியில் தோற்றிய வி. கந்தசாமி, எ.எம்.மொகமட் ரஜீப், ஏ. ஏ.கே.அப்துல் சதாகிர், எஸ்.எல். சம்சுதீன், எம்.ஐ.ஷகீர் ஆகிய சப் இன்ஸ்பெக்டர்கள், மனித உரிமை ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பித்த முறைப்பாட்டை அடுத்து மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரி மேற்கண்ட உத்தரவை வழங்கியுள்ளார்.

தமிழில் பரீட்சைக்குத் தோற்றிய சப் இன்ஸ்பெக்டர்கள் இருவருக்கும் பதவி உயர்வு வழங்கப்படவில்லை.

இவர்கள் ஆணைக்குழுவுக்கு தெரிவித்த முறைப்பாட்டில்- தங்களுக்கு வழங்கப்பட்ட தமிழ் வினாப்பத்திரங்களில் இருந்த பிழையினால் கேள்விகளுக்கு உரிய முறையில் பதிலளிக்க முடியாமற் போய்விட்டது என்றும் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர். இதை விசாரித்த மனித உரிமை ஆணைக்குழு அதிகாரி மேற்கண்ட உத்தரவை வழங்கியுள்ளார்.

# ஐ.நா. மனித உரிமைகள் அதிகாரி அடுத்த மாதம் யாழ். வருகிறார்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் தொடர்பான அதிகாரி இயன் மார்ட்டின் அடுத்த மாதம் முற்பகுதியில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

புரிந்துணர்வு உடன்படிக்கைக்குப் பின்னர் இலங்கையில் மனித உரிமைகளைப் பேணும் விடயத்தில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றங்கள் குறித்து ஆராய்வதற்காகவே இயன் மார்ட்டின் இலங்கைக்கான விஜயத்தை மேற்கொள்ளவிருக்கிறார்.

அடுத்த மாதம் முதல் வாரத்தில் கொழும்புக்கு வரவிருக்கும் இவர், யாழ்ப்பாணத்துக்கும் விஜயம் செய்யவுள்ளார். யாழ்ப்பாணத்தில் தற்போதைய சூழ்நிலையில் மனித உரிமைகளைப் பேணும் விடயங்களில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றங்கள் குறித்து இவர் ஆராயவிருக்கிறார். இதற்காகப் பல்வேறு மட்டங்களில் சந்திப்புக்களுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

(க)

## சிவராத்திரி விழா

இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சினால் நடாத்தப்படும் மகா சிவராத்திரி விழா - மார்ச் மாதம் 1 ஆம் திகதி சனிக்கிழமை இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் உதவிப் பணிப்பாளர் சிவமகாலிங்கம் தலைமையில் திருநெல்வேலி சிவன் கோவிலில் நடைபெறவுள்ளது.

# அரசியல், பொருளாதார விடயங்கள் ரோக்கியோ பேச்சுவார்த்தையில்!

ஜப்பானின் - ரோக்கியோ நகரில் நடைபெறவிருக்கும் அடுத்த சுற்றுப் பேச்சுக்களில் பொருளாதார, அரசியல் விவகாரங்கள் குறித்தே பேசப்படும் என்று அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் செய்தியாளரிடம் பேசிய அவர் மேலும் தெரிவிக்கையில், அடுத்த மாதம் 18 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதிவரை நடைபெறவுள்ள பேச்சுக்களில் - அரசியல், பொருளாதார விடயங்களுக்கு முக்கியத்துவமளிக்கப்படும் எனத் தெரிவித்தார்.

அத்துடன், யாழ்.நூலகத் திறப்பு வழாவை விரைவில் நடத்துவதற்கும் அரசாங்கம் விரும்புவதாகவும் அமைச்சர் பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

சமாதானப் பேச்சுக்களில்

# தனித்தரப்பாக முஸ்லிம்கள்; ஹக்கீம் குழுவினர் தீர்மானம்

இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுவார்த்தையில் வடக்கு-கிழக்கு முஸ்லிம்களின் சார்பில் தனித்தரப்பாகப் பங்குகொள்வதற்கு முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தீர்மானம் எடுத்துள்ளனர்.

இந்தத் தீர்மானம் நேற்று முன்தினம் காலை அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்திலே எடுக்கப்பட்டது.

பரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து இது தொடர்பாகப் பேசுவதற்கும் முடிவு எடுக்கப்பட்டது.

பிரதம மந்திரியுடனான சந்திப்பில்-நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அதாவுல்லா அணியைச் சேர்ந்த உறுப்பினர்கள் 12 பேர், தேசிய ஐக்கிய முன்னணியின் எம்.பிக்கள் மூவர் மற்றும் ஐக்கிய தேசிய முன்னணியின் எம்.பிக்கள் இருவரும் பங்கேற்க இருக்கின்றனர்.

இதேவேளை, இந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் நோர்வேத் தூதுவரையும் சந்திக்க இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.




# சமாதான முயற்சிகள் தொடர்பாக அரசு தெளிவான நடவடிக்கையில்லை

## ஜனாதிபதி சந்திரிகா குற்றச்சாட்டு

சமாதான் முயற்சிகளில் அரசாங்கம் தெளிவான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க குற்றம் சாட்டியிருக்கிறார்.

பிபிலையில் நடந்த கூட்டம் ஒன்றில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

சமாதான முயற்சிகள் குறித்து அரசாங்கத்திடம் பலமுறை விளங்கங்களைக் கோரினேன். ஆனால், அரசாங்கம் எதற்கும் சரியாகப் பதில் ளிக்கக்கூட இல்லை.

சமாதானப் பேச்சுக்களில் வீண் கால தாமதங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. பிறநாடுகளின் அரசியலமைப்புச் சட்டங்களை ஆராய்வதாகக் கூறிக்கொண்டு, நாட்டுக்கு நாடு சென்று காலத்தைக் கடத்திக் கொண்டிருக்கிறார்கள் என ஜனாதிபதி சந்திரிகா மேலும் தெரிவித்தார்.

# கப்பலில் எடுத்துவரப்பட்டது பூச்சிநாசினிக் கழிவுகள்

## துறைமுக அபிவிருத்தி அமைச்சு அறிவிப்பு

கொழும்புத் துறைமுகத்துக்கு வந்த கப்பல் ஒன்றில் அணுக்கழிவுகள் எடுத்துவரப்பட்டதாக வெளியான செய்திகளை -துறைமுகங்கள் அபிவருத்தி கப்பற்துறை அமைச்சு மறுத்துள்ளது. கப்பலில் கொண்டு வரப்பட்டவை பூச்சிநாசினி உற்பத்திக்குப் பயன்பட்ட இரசாயனக் கழிவுகளே என அமைச்சு தெரிவித்துள்ளது.

சீனாவிலிருந்து மத்திய கிழக்கு நோக்கிச் சென்ற எல்.ரி.கிராண்ட் என்ற இக்கப்பலில் திடீரென ஏற்பட்ட தீயை அணைக்கவே கப்பல் கொழும்புத் துறைமுகத்திற்கு அவசரமாகக் கொண்டுவரப்பட்டது எனவும் தெரிவிககப்பட்டுள்ளது.

கப்பலின் கொள்கலன்களிலிருந்து வெளிவரும் துர்நாற்றத்துக்குக் காரணம் தீயினால் எரிந்த இரசாயனப் பதார்த்தங்களும், அதை அணைக்கப் பாவிக்கப்பட்ட இரசாயனங்களின் வாடையுமே எனவும், இந்த கைய 278 கொள்கலன்கள் தற்போது துறைமுகத்தில் இறக்கிவைக்கப்பட்டுள்ளன எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

## நுழைவாயில் திறப்பும், மெய்வல்லுநர் போட்டியும்

ஆனைக்கோட்டை-உயரப்புலம் குணபாலன் வித்தியாலயத்தின் புதிய நுழைவாயில் திறப்புவிழாவும், இல்ல மெய்வல்லுநர் போட்டியும் நாளை செவ்வாய்க்கிழமை பி.ப.1.30 மணிக்கு வித்தியாலய அதிபர் செல்வி பீ.வடிவேல் தலைமையில் நடைபெறவுள்ளது.

# தாயகம் திரும்பியபோது கைதானோர் விடுதலை

## மன்னார் நீதிவான் நடவடிக்கை

இந்தியப் படகொன்றின் மூலம் இலங்கைக்குத் திரும்பிய யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இலங்கை அகதிகள் 33 பேரும், இந்தியப் படகோட்டிகள் இரண்டு பேருமாக மொத்தம் 35 பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தனர்.

பொலிஸார், இவர்கள் அனைவரையும் மன்னார் மாவட்ட நீதிவான் எம்.பி.முகைதீன் முன்னிலையில் ஆஜர் செய்தபோது, அகதிகள் அனைவரையும் அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

அத்துடன், இந்தியப் படகோட்டிகள் இருவரையும் இலங்கை எல்லைக்குள் சட்டவிரோதமாகப் பிரவேசித்ததால் - அவர்களை எதிர்வரும் 28 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

படகில் வந்த அகதிகளில் பச்சிளம் குழந்தை உட்பட 12 சிறுவர்களும்; 7 பெண்களும், 14 ஆண்களும் அடங்குவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

# கிழக்குக் கடலில் நடமாடியது மீன்பிடி இழுவைப் படகாம்!

(கொழும்பு)

கிழக்குப் பிராந்திய கடற்பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை நடமாடியதாகத் தெரிவிக்கப்பட்ட கப்பல் - மீன்பிடி ட்ரோலர் எனக் கடற்படை வட்டாரங்கள் நேற்று முன்தினம் மாலை தெரிவித்தன.

கிழக்குப் பிராந்தியத்தில் மர்ம ஆயுதக் கப்பல் ஒன்று நடமாடுவதாகக் கிடைத்த தகவல்களையடுத்து, நடவடிக்கை எடுத்த கடற்படை இக்கப்பல் மீன்பிடி இழுவைப் படகு எனபதைச் சோதனையின்போது கண்டுபிடித்ததாகத் கடற்படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

(க)

# உடனடி மனிதாபிமானச் செயற்திட்டம் வவுனியாவில் தேவை மதிப்பீடு ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வவுனியா மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் உடனடி மனிதாபிமானச் செயற்திட்டங்கள் தொடர்பான தேவைமதிப்பீட்டுப் பணிகள் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

மேற்படி தேவைமதிப்பீடுகளை மேற்கொள்வதற்காக விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும், அரசின் பிரதிநிதிகளும், அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் அதிகாரிகளும் இணைந்து பணியாற்றவுள்ளனர்.

(க)




திருமறைக் கலாமன்றத்தினால் அண்மையில் வெளியிடப்பட்ட "கம்பன் மகன்" நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்ட நூலாசிரியர் யோன்சன் ராஜ்குமார், அண்ணாவியார் பேக்மன் ஜெயராஜ், கலாநிதி குணராஜா, அருட்திரு செல்வராஜா அடிகள் மற்றும் சாம் பிரதீபன் ஆகியோரைப் படத்தில் காணலாம்.

# சின்னஞ் சிறு செய்திகள்

## அதிபர் பதவிகளுக்கு வெற்றிடங்கள்

குரும்பசிட்டி - பொன் பரமானந்தா வித்தியாலயம், ஏழாலை வடக்கு அ.மி.த.க.பாடசாலை, சிறுவிளான் கனகசபை வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் அதிபர் பதவிகள் வெற்றிடமாக உள்ளன.

இவற்றுக்குப் பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன, உரிய முறைப்படி வலயக்கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு வலிகாமம் பகுதி உதவிக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

## சட்டவிரோதமாக மாடு வெட்டியோருக்கு அபராதம்

சட்டவிரோதமான முறையில் இறைச்சிக்காக மாடு வெட்டிய ஆறு பேரை அச்சுவேலிப் பொலிஸார் கைது செய்தனர்.

இவர்களைப் பொலிஸார் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தபோது, நீதிவான் ஒவ்வொருவருக்கும் 500 ரூபா அபராதம் விதிததார்.

## சமாசம் அங்குரார்ப்பணம்

யாழ். பிரதேச செயலர் பிரிவுக்கான கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் கடந்த 14 ஆம் திகதி குருநகரில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

மேற்படி நிகழ்வில் கடற்தொழில் பரிசோதகர்கள், கூட்டுறவுப் பரிசோதகர் மற்றும் கடற்புலிகளின் பிரமுகர்கள் போன்றோர் கலந்துகொண்டனர்.

(55)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

மருதங்கேணி இ.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 27 ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப. 2 மணிக்கு அதிபர் நவநீதமணி தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் வி. அருளானந்தம் (பிரதிக் கல்விப் பணிப்பாளர் - வடமராட்சி) சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்வார்.

(116)

★ ★ ★

யாழ். கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி கல்லூரி மைதானத்தில் இன்று பி.ப. 2 மணியளவில் இடம்பெறவுள்ளது.

கல்லூரி அதிபர் சிவகடாட்சம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கல்லூரியின் முன்னாள் அதிபர் பி.ரி. ராஜா கலந்துகொள்ளவுள்ளார்.

★ ★ ★

கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பி.ப. 1.30 மணிக்குப் பாடசாலை அதிபர் க.செல்வக்குமாரன் தலைமையில் நடைபெறவுள்ளது. இவ்விழாவில் வலிகாமம் கல்விவலயக் கல்விப் ப்ணிப்பாளர் சு.சுந்தரசிவம் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

(69)

## நாடாளுமன்ற உறுப்பினரின் உப அலுவலகம்

தமிழர் கூட்டமைப்பின் நடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தின் உப அலுவலகம் ஒன்று எதிர்வரும் 28 ஆம் திகதி காலை 10 மணிக்குப் பருத்தித்துறையில் திறந்து வைக்கப்படவுள்ளது.

பொதுமக்களின் குறைகளை அறிவதற்கும், பொதுமக்களுடனான சந்திப்புக்களை ஏற்படுத்துவதற்கும் இவ்வலுவலகம் பயன்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

(09)

# செம்மணியில் கண்ணிகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படவில்லை!

## பொதுமக்கள் விசனம்

செம்மணிப் பகுதியில் - கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் இதுவரை மிதிவெடிகள் அகற்றப்படாததால், அப்பகுதி மக்கள் பெரும் விசனமடைந்துள்ளனர்.

இப்பகுதியில் பெருமளவு மிதிவெடிகள் விதைக்கப்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

மேற்படி பிரதேசத்தில் இதுவரை 11 இற்கும் மேற்பட்ட கால்நடைகள் மிதிவெடிகளில் சிக்கிப் பாதிப்புக்குள்ளாகியுள்ளன.

அத்துடன், கிராமவாசிகளும் கால்களை இழந்துள்ளனர். இதுவரை மிதிவெடிகள் அகற்றப்படாததால் இப்பகுதிகளில் குடியிருக்கவும், தொழில்களை மேற்கொள்ளவும் முடியாதுள்ளது என்றும், இதுபற்றி உரிய அதிகாரிகளிடம் முறையிட்டும் எந்தவிதபலனும் கிடைக்கவில்லை என்றும் பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. (55)



சாவற்கட்டு கல்வி அபிவிருத்தி இளைஞர் கழகத்தினால் அண்மையில் நடத்தப்பட்ட பரிசளிப்பு விழாவில் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவிக்கு அறநெறி பாடசாலைத் தலைவர் ந.கந்தசாமி பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். (100)

### மயான புனரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு

நாவற்குழி இந்து மயான புனரமைப்பின் ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளுக்காக இந்து கலாசார அமைச்சு 2 இலட்சம் ரூபா வழங்கியுள்ளது.

இம்மயானத்தில் பெருமளவு மிதிவெடிகள் புதைக்கப்பட்டு இருந்ததால் அப்பகுதி மக்கள் சடலங்களை எரியூட்டுவதற்காக தூர இடங்களுக்குச் செல்லவேண்டியிருந்தது.

இவ்விடையூறுகள் குறித்து அவ்வூர் அபிவிருத்திச்சங்க உறுப்பினர்கள் இந்து கலாசார அமைச்சுடன் தொடர்பு கொண்டதையடுத்து இந் நிதி வழங்கப்பட்டுள்ளது. (108)

### சோதனைச் சாவடி இடமாற்றம்

(ஊரெழு)

புன்னாலைக்கட்டுவன் தெற்குச் சந்தியில் அமைந்திருந்த படையினரின் பிரதான சோதனைச் சாவடி இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

தனியார் வர்த்தக நிலையம் ஒன்றில் அமைந்திருந்த மேற்படி சோதனைச்சாவடியை, மீள வர்த்தக நிலையத்தை அமைக்க, வர்த்தகர் கேட்டுக்கொண்டதிற்கிணங்க- அதற்கு முன்னாலுள்ள வெளிப் பிரதேசத்தில் பிரதான சோதனைச் சாவடியைப் படையினர் அமைத்துள்ளனர். (96)

## அரியாலையில் கோலாகலமாக நடைபெற்ற தமிழ் விழா!

(அரியாலை)

அரியாலை ஸ்ரீ அண்ணமார் ஆலயத்தின் சக்தி பண்ணிசை மன்றம் நடாத்திய தமிழ்விழா மிகவும் கோலாகலமாகக் கடந்த 16 ஆம் திகதி பி.ப. 4 மணிக்கு இடம்பெற்றது.

அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை அதிபர் பொ.நடராசா தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் - பிரதம விருந்தினராகப் பேராசிரியர் அ.சண்முகதாஸும், சிறப்பு விருந்தினர்களாக நல்லூர்க் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஈஸ்வரனும், யாழ். மாநகர முன்னாள் மேயர் செல்லன் கந்தையனும் கலந்துகொண்டனர்.

ஈழத்துக்குப் பெருமை சேர்த்த கலாபூஷணம் வே.க.பாலசிங்கம், கலாபூஷணம் வீ.கே.இரத்தினம், சங்கீதவித்துவான் கலாபூஷணம் பாலசிங்கம், இசையமைப்பாளர் பொன்னுத்துரை, சமூக சேவையாளர் அதிபர் சீ.வைகுந்தசாமி, கடலோரக் காற்று புகழ் ந.கேசவராஜா ஆகியோர் அரியாலை ஸ்ரீ சரஸ்வதி அம்பாள் ஆலயத்திலிருந்து மங்கள வாத்தியம், கரகாட்டம், குதிரையாட்டம், காவடியாட்டம் போன்றவற்றோடு அழைத்துவரப்பட்டு, அண்ணமார் ஆலய முன்றலில் உள்ள கலையரங்கில் பதக்கங்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள், கலைபபோட்டிகள், கராத்தே கண்காட்சி, இசை நிகழ்வு என்பன இடம்பெற்றன.

மேற்படி நிகழ்வில் பெரும் திரளான பொதுமக்கள் கலந்துகொண்டனர். (55)


வாழ்க வளமுடன்

நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

HAPPY BIRTHDAY

நாலாவது அகவையில்



பெயர் : ம.மதுஷா
முகவரி: நாகலிங்க முதலியார் ஒழுங்கை, பருத்தித்துறை.

ஐந்தாவது அகவையில்



பெயர் : உ.ஜினோ ஜெலஸ்ரிக்கா
முகவரி: 408, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------------------

முகவரி:------------------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

---------------------------
பெற்றார் ஒப்பம்


# நீரிழிவு நோய் DIABETES

பகுதி 28

- ச.ஆ.கோபாலமூர்த்தி.

ஒலியின் உரப்புப் பற்றிய விபரங்கள் அண்ணளவாக இங்கு தரப்படுகிறது. ஒலி டெசிபெல் (Decibel) அலகில் அளக்கப்படும்.

| ஒலியின் உரப்பு (டெசிபெல்) | ஆபத்தான ஒலிகள் உள்ள சந்தர்ப்பங்கள்/ இடங்கள் |
|---|---|
| ஆபத்தான ஒலி (பேரொலி) 130 120 110 100 | ஷெல் வெடியொலி, குண்டுவெடியொலி, இடியொலி, அரியும் மின் சாரவாள், கூம்பு ஒலிபெருக்கி, ஜெற் விமானம், பெரிய ஹோர்ண், றைக்கோட்டிங் பார், அரைக்கும் ஆலை, மின்பிறப்பாக்கி. |
| மிக உயர்ந்த ஒலி 90 80 | உழவு இயந்திரம், மோட்டார் இயந்திரம், மிகுதியான போக்குவரத்து. |
| ஒரளவு உயர்ந்த ஒலி 70 60 50 | சாதாரண சம்பாஷணை. |
| இதமான ஒலி 40 30 | அமைதியான அலுவலகம், நூலகம். |
| சாந்தமான ஒலி 20 10 | |

### மூலநோயும் நீரிழிவு நோயாளரும்

நீரிழிவு நோயாளருள் பலர், மூலநோயாலும் அவதியுறுகிறார்கள். மூலநோய் எவ்வாறு ஏற்படுகிறது? அதற்கு என்ன செய்யவேண்டும்? என்ற அறிவின்மையால், நோயுடன் வாழ்கிறார்கள். மூலத்தால் இரத்தம் போய்க்கொண்டுதான் இருக்கிறது 'கோட்டெக்ஸ்' சுகாதாரத் துவட்டியை உபயோகித்துச் சமாளிக்கிறோம் என ஆண்களும் கூறுகிறார்கள். தொடர்ச்சியாக இரத்தம் போவதை அனுமதித்தால், அது இரத்த சோகைக்கு இட்டுச்செல்லும். இரத்தப் படிவுகள் உள்ள இடங்களில் கிருமிகள் பெருக்கமடையும். சிறிதளவு இரத்தம்தானே உறிஞ்சப்பட்டிருக்கிறது என, ஒரே சுகாதாரத் துவட்டியை நெடுநேரம் பயன்படுத்தினால், கிருமிகள் பெருகி வேறு நோய்கள் ஏற்படும் வாய்ப்பு உண்டு.

குதப் பகுதியில், சம இடைவெளிகளில் அமைந்துள்ள இரத்தக் குழாய்கள் வீங்கி, அதிலிருந்து இரத்தம் கசிவதையே மூலநோய் என்று அழைக்கிறார்கள். பரம்பரை வழியாக, பிறக்கும்போதே இரத்தக் குழாய்கள் நலிந்திருக்கும். மலச்சிக்கல், மலங்கழிக்காது அடக்கி வைத்திருத்தல் போன்ற காரணங்களாலும் இது ஏற்படலாம். பாடசாலைகளில் போதிய மலகூடங்கள் இல்லாமை, அவை துப்புரவாகப் பேணப்படாமை, பாடசாலை வேளை முழுவதிலும் மலகூடததிற்குத் தண்ணீர் விநியோகம் இல்லாமை போன்ற காரணங்களால் மலங்கழிக்கும் தேவை ஏற்படும்போது, மலங்கழிக்காது அடக்கி வைத்திருப்பதால், மாணவர்கள் மூலநோய்க்கு ஆளாகும் ஆபத்து ஏற்படுகிறது. கொவ்வையிலை சிறந்த மலம் இழக்கி மூலிகையாகும். இது ஆண்டு முழுவதும் இலவசமாக எங்கும் கிடைக் கக்கூடியது. இதனைத் தேங்காய்ப்பூவிற்குப் பதிலாகப் பிட்டுமாவுடன் சேர்த்துப் பிட்டு அவித்து - உண்டு மலச்சிக்கலைத் தவிர்க்கலாம். விருப்பமான எந்த முறையிலாவது, எல்லாவேளை உணவிலும் இதனைச் சேர்த்தல் நன்று.

கீரைக்கு விசிறப்படும் சில இரசாயனப் பூச்சிநாசினிகளும் மலச் சிக்கலை ஏற்படுத்துவதாகச் சந்தேகிக்கப்படுகிறது. விசிறப்பட்ட மருந்தின் வீரிய காலம் முடிவடையுமுன் பறிக்கப்பட்ட கீரைகளும் விற்கப்படலாம். கீரை-செடிவகையைச் சேர்ந்ததால், கீரையில் நாய்களினால் சிறுநீர் விசிறப்பட்டிருக்கவும் வாய்ப்பு உண்டு. இத்தகைய மாசுபட்ட கீரைகளை இனங்காண்பதற்காக முற்காலத்தில் கீரையை 'மணந்துதட்டல்' என்னும் முறையில் முகர்ந்து பார்த்த பின்னரே சமைப்பார்கள். இப்பொழுது இந்த நடவடிக்கை கைவிடப்பட்டது துரதிஷ்டவசமானது. கீரையைவிட முல்லை, முசுட்டை, கொவ்வை, பொன்னாவரசு இலைகள் பாதுகாப் பானவை.

மலங்கழிக்கும்போது இரத்தம் கசிவதுடன், சிறிதளவு மூலம் வெளித் தள்ளப்படுவதும், பின்னர் தானாகவே உட்சென்றுவிடுவதுமான நிலையை, மூலநோயின் 1 ஆம் நிலை என்பர். இவ்வாறு வெளிவரும் மூலம், தானாகவே உட்செல்லாது, ஆனால் தள்ளிவிடும்போது, உட்செல்லும் நிலையை 2 ஆம் நிலை என அழைப்பர். வெளிவந்த மூலம் தள்ளினாலும் உட்செல்லாத நிலையை 3 ஆம் நிலை என்பர். 3 ஆம் நிலையை அடைந்தால் சத்திர சிகிச்சை செய்யவேண்டியிருக்கும். 1 ஆம் , 2 ஆம் நிலையில் மூலத்தில் ஓர் மருந்தை ஊசிமூலம் செலுத்தி அதனைச் சுருங்க வைப்பதுண்டு.

(தொடரும்)

### கிளை புனரமைப்பு

(ஊரெழு)

"அழகிய முதுமை" யாழ். கிளையின் புனரமைப்புக் கூட்டம் எதிர்வரும் 28 ஆம் திகதி பி.ப.2 மணிக்கு யாழ்.செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி கூட்டத்தில் 2003 ஆம் ஆண்டுக்குரிய நிர்வாக சபை அங்கத்தவர்களை தெரிவுசெய்தல் மற்றும் புதிய செயற்பாடுகள் தொடர்பான ஆராய்வு என்பன இடம் பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது. (96)

## மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கி கொழும்புத்துறையில் ஒருவர் காயம்!

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறைப் பகுதியில் - மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானதில் குடும்பஸ்தர் ஒருவர் காயமடைந்த நிலையில், யாழ்.போதனா வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டார்.

நேற்றுமுன்தினம் நண்பகல் இடம்பெற்ற இந்த விபத்தில்- கொழும்புத்துறையைச் சேர்ந்த தருமலிங்கம் தர்மகுலசிங்கம் (வயது 40) என்பவரே காலில் பலத்த காயமடைந்தநிலையில் வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றார். (ச)

### சீனன்குடாவில் ஆயுதங்கள் கண்டுபிடிப்பு

(திருகோணமலை)

சீனன்குடா சங்கமக்காட்டுப் பகுதியில் பெருந்தொகையான ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கைக்குண்டுகள், துப்பாக்கிகள், துப்பாக்கித் தோட்டாக்கள், ஆர்.பி.ஜி. மற்றும் மோட்டார் குண்டுகள் என்பனவே பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டன. (க)

## வன்னிப் பகுதியிலும் சமுர்த்தித் திட்டங்கள்

(கொழும்பு)

முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்டங்களில் இவ்வாண்டு தொடக்கம் சமுர்ததி அபிவிருத்தித் திட்டங்களை மேற கொள்வதற்கு - 2 கோடி 55 லட்சம் ரூபா நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகச் சமுர்த்தி அபிவிருத்தி அமைச்சர் ஏ.ஆர்.டி.சிறிசேன தெரிவித்துள்ளார்.

அத்துடன், நாடளாவிய ரீதியில் சமுர்த்தி சமூக அபிவிருதத்த் திட்டங்களை அமுல்படுத்துவதற்காக இவ்வாண்டு 40 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## A-9 னை நீளும் நினைவுகள்

பகுதி - இருபது

ஓரிரு மாதங் கூடிய மோனத்தை
ஒரு நடு நிசி வேட்டுக் கலைத்தது.
பேரிரைச்சல்கள் மண்ணை உசுப்பின.
பெரும் வெடியொலி வானை உலுக்கிற்று.
சீறி வந்தன 'வானப் பருந்துகள்'
திசைகள் எங்குமே பொத்தல்கள் போட்டன.
"ஏது செய்தியாம்"? காதுகள் கேட்டன.
"மாங்குளத்திற்போர்"
வானொலி சொல்லிற்று.

மாங்குளத்தின் வெவ்வேறரண்களும்
மழை பொழிந்ததாய் வேட்டினைக் கக்கின.
வேங்கைக் கூட்டங்கள் பாய்வதைப் போல்...
தமிழ்
வீரர் முன்னேறி, முற்றுகை போட்டனர்.
'ஓங்கும் கைகள்'தான் உயிரினைக் காத்திடும்;
என்பதால் சமர் மூர்க்கம் வலுத்தது.
தேங்கும் வெள்ளத்தை வந்தவெள்ளங்கொண்டு
செல்லல் போலவே கதையும் முடிந்தது.
அரண்கள் ஒவ்வொன்றாய் சரியத் தொடங்கின.
அயலெலாம் உயிர் ஓலம் எழுந்தது.
உறுதி கொஞ்சங் கொஞ்சமாய்ப் போயிற்று.
உயிர்ப்பயம் கட்டுக் கோப்பை உடைத்தது.
இறுதியில் வெடி மருந்தோடு தாவிய
வண்டியால் இடி ஒன்று எழுந்தது.
குருதி ஆற்றிலே 'கொற்றவை நாச்சியார்'
கூத்து ஆடினாள்; போர்த்தளஞ் சாய்ந்தது.

- ஜெயங்கொண்டான்

# இலக்கியச் சோலை


## நாமும் மனிதர் என்பதால்...



ஊனமது ஈனமாவதால் -
பூபாளமும் சுப்ரபாதமும் ஏது?
ஒளியொன்று வாராதோ
வழியொன்றைத் தாராதோ
மனமது மௌனமாய் அழுகின்றதே.
முடம் முழம் சறுக்கி விழியற்ற
வெற்றுப் பார்வையும் ஒலியற்ற
கேள்விப் பரம்பலும் மொழியதுவும்
வரமறுத்த நடைப்பிணங்களாய்; நாம்.
மான உணர்விற்கு குறைவில்லை.
நேசப்பண்பிற்கும் தடையில்லை.
உதவிடும் மனநிலையது தளர்வில்லை.
சேவையில் என்றும் அழிவில்லை.
வாழ்வினில் எமக்கேன் வழியில்லை?
குறிக்கும் மொழிபேசி மழலையாய்
முனகும் மூச்சும் அன்பையே தேடும்.
வாழும் போதும் வாழ்விக்க பலருண்டென்பதால்
நிம்மதியாய் நிமிர்கின்றோம் வீம்புடன்
ஏனெனில்; நாமும் மனிதர் என்பதால்.

தி.ஜெயராஜ்

## விலகல்



இன்றும் நான் பேசநினைத்தேன்
வார்த்தைகள் சலிப்பூட்டின
ஒளி அதிக சங்கடத்தைத் தந்தபோது
வெளியே
சுவரினோரம்
நிழலும் இருளும் கலந்திருந்த
மறைவில் ஒதுங்கினேன்

உள்ளே
இசையின் உக்கிரமும்
நடனத்தின் ஆவேசமும்
சுவர்களிலும் நிழ்ல்களிலும் பிரதிபலித்தன

யாரும்
என்னைக் கவனிக்கவில்லை.

கருணாகரன்

## கிழக்கும் மேற்கும்



★ ★ ★ ★

"உலகினை ஆள்வோர் உரோமரே - அந்த
உரோமரை ஆண்டிட வல்லவன்நான்" எனக்
ஆர்த்ததன் றெழுந்த யூலியஸ் ஸீஸர்
அயல் நாடுகளை அடித்து வீழ்த்தினான்!
ஆட்சியில் அமர்ந்தவன் தன்பலம் நா/ கூட்டினான்!
ஆண்டுகள் தோறும் நிகழும் நகரவிழாவினை
இவ்வாண்டு ஸீஸரின் வெற்றி விழாவாய்
சிறப்புடன் நடத்திட விரும்பிய மக்கள்
பொருத்தமா யொழுங்கள் விரைந்து செய்தனர்!
பெருவிழா நாளன்றுதன் மனைவி "கல்பேணியா"
நண்பன் அந்தோனி ஆகியோர் உடன் வர
நகர் வலம் வந்தான் யூலியஸ் ஸீசர்!
வருகின்ற வழியில் மாவீரன் ஸீஸரை
"மார்ச் நடுநாளில் உனதுஇப் பெருமிதம்
என்னவாகும் இருந்து பார்" என்று ஓர்
குரலழைத்து எச்சரிக்கை தந்ததாயினும்
அலட்சிய மாயவன் அடைந்தான் விழாமேடை!
முன்னரே ஏற்பாடு செய்ததன் வண்ணமே
ஸீஸரின் தலையில் முடியினைச் சூட்டிட
மும்முறை முயன்றனர் - ஸீஸர் தடுத்தான்!
மக்கள் ஆட்சியை மாற்றிப் புதிதாய்
மன்னனாட்சி முறையை மீண்டும் புகுத்தலை -
ஸீஸர் மணிமுடி சூடிக் கொள்வதை -
ஸீஸரின் உயிர் நண்பன் புறூட்டஸ் வெறுத்தான்!
மார்ச் நடுநாளில் உரோமின் மன்னனாய்

மன்னன் தன் தளபதி களத்திலில்லை என்பதை
அறிந்து கொண்டதும் திகைத்து நின்றான்!
நெருக்கடி மிகுந்த அந்த வேளையில்
மன்னனின் உதவிக்கு வருபவன் போல
மன்னனை நோக்கி வந்தான் வன்னியன்!
தன்னுயிர் நண்பனாம் வன்னியின் வருகையால்
இதயம் மகிழ்ந்த சங்கிலி தன் நண்பனை
இருகை நீட்டி அன்புடன் அணைத்தான்!
வன்னியும் பதிலுக்காய் அரவணைப் பவன்போல்
மன்னனைக் கைகளால் இறுகப் பற்றினான்!
திட்டத்தின்படியே தகுந்த நேரத்தை -
திட்டத்தின்படியே வன்னியின் சைகையை -
எதிர்பார்த் திருந்த பறங்கியர் விரைந்து
சங்கிலி கைகளில் இட்டனர் விலங்கினை!
மன்னனின் நிலைகண்டு படைகள் கிளர்ந்தன!
"தளபதி இன்றிச் செயற்படல் தவறு" -
என்று தடுத்தான் பரநிருப சிங்கன்!
எனவே கிளர்ந்த மன்னன் படைகள்
அக்கிரமம் கண்டும் அடங்கி நின்றனர்!
அக்கிரமம் அறிந்து விரைந்த தளபதி
வழியில் பதுங்கிக் காத்து நின்ற
பழிகாரர்களால் கொலையுண் டிறந்தான்!
பொருத்த மில்லாத பொய்ப்பழி குற்றம்
மன்னன் மீதினில் சுமத்திய பறங்கியர்
விசாரணை செய்வதாய் வித்தைகள் காண்பித்து
வீர மன்னனின் சிரத்தைக் கொய்தனர்!
தமிழரின் ஆள்புலம் கொடியவர் காலின்கீழ்!
தமிழரின் சுதந்திரம் கயவரின் காலின்கீழ்!!



முருகு

ஸீஸர் மணிமுடி சூடிக் கொள்ளுதல்
உறுதி என்பதை ஹாஸ்கா கூறிடக்
கேட்டதும் காசியஸ் விரைந்து ஹாஸ்காவைத்
தந்திரமாகத் தன் அணி சேர்த்தும்
சூழ்ச்சிகள் செய்து மார்க்கஸ், புறூட்டஸ்
என்னுமிரு பெயரையும் இன்னும் பலரையும்
தன்னடி சேர்த்துக் கொண்ட ஹாஸியுஸ் -
ஸீஸரைக் கொல்லத் திட்டம் வகுத்தான்!

(தொடரும்)

# பாலையும் சோலையும்

## கலாநிதி. சொக்கனின் வாழ்க்கைப் பதிவுகள்

பார்த்துப் படிக்கவே சிரமமான இவற்றை இரண்டு நாளிலே பாடமாக்கி சரஸ்வதி பூசையன்று ஓதி, ஓதுவிக்கவேண்டும் என்பது ஆசிரியர் கட்டளை. பாட்டை விளங்கிக் கொள்ள வேண்டும் - பிழையின்றி, பாடமாக்கிப் பாடவேண்டும் - இசையோடும் பாடவேண்டும். பத்தே வயதான சிறுவனுக்கு இதைவிடப் பாரச்சுமை வேறு இருக்க முடியுமா?



நான் அம்மாவை மன்றாடி, காய்ச்சல் என்று நடித்து சரஸ்வதி பூசைக்கு முதல்நாள் பள்ளிக்கு மட்டம் போட்டேன். விட்டாரா மனிசன்? இரண்டு மாணவப் பொலிஸார் அன்று ஒன்பது மணிக்கு என் வீடு வந்து, அம்மாவின் சம்மதத்தோடு என்னை இழுத்துச்சென்று சோமஸ்கந்தரின் முன்பு விட்டனர். வகுப்புப் பாடங்களிலிருந்து எனக்கு விடுகை அளித்து, தன்னந்தனிய விருந்து, சரஸ்வதி அந்தாதிப் பாடல்களைப் பாடமாக்கவிட்டார்.

விதியை நொந்து கொண்டு, பாடல்களை அரையும் குறையுமாகப் பாடமாக்கினேன். நாளை இவற்றை ஒப்புவிக்கும்போது பிழைகள் நேர்ந்தால்? அப்பப்பா ... ...! சோமஸ்கந்தரின் இடதுகை வானத்துக்கும் மண்ணுக்குமாக வளர்ந்து என்னைப் பயமுறுத்திய வண்ணமே இருந்தது. நல்லகாலம் அடுத்த நாள் இந்த யமகண்டத்திற்கே இடமில்லாது போய்விட்டது. காரணம்?

சமய வைபவங்கள் போன்ற சிறப்பு நாள்களில் வலிப்பு நோய் வந்து விழுந்துவிடுவது சோமஸ்கந்தருக்கு வழக்கமாயிருந்தது. அன்றும் அந்த வலிப்பு நோய் வந்திட....

அது என்னைக் காத்தது!

ஆனால் இந்தக் குறைகள் யாவிற்கும் அப்பாலானவராய் எனது கல்வி வளர்ச்சிக்குப் பலமான வித்திட்ட தெய்வமாய் அவரை இன்றும் மானசகமாக வணங்கி வருகின்றேன்.

முருகையாவையும் என்னையும் அண்ணன் தம்பியாக நடிக்க வைத்து நாடகம் ஒன்றை அரங்கேற்றவும் சோமஸ்கந்தர் முற்பட்டதுண்டு. இந்நாடகத்தினை எமக்குப் பயிற்றிய ஆசிரியர் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார். பத்து வயதுப் பாலகனாகக் கண்ட என்னை இந்தக் கிழட்டுருவிலே காண்கையில் அவர் என்ன நினைப்பாரோ? அந்த முருகன்தான் அறிவான்...!

யாழ்.இந்துக் கல்லூரித் தமிழ்ப் பாடசாலையிலே தமிழ் இலக்கியத்தைச் சுவைபட, ஆறாம் வகுப்பில் கற்பித்த அமரர் சிவகுரு அவர்களையும், பூமிசாத்திரம், அட்சரகணிதம் என்பவற்றைச் சுவைபடக் கற்பித்த முத்துக்குமாரு அவர்களையும் என்றும் நன்றியோடு நினைவு கூர்கின்றேன்.

நான் நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையிலே ஏழாம் வகுப்பிலே சேர்ந்து அவ்வகுப்பிலே ஓராண்டு கற்றபொழுது, ஆறாம் வகுப்பிலே நான் கற்றிருந்தவற்றையே திரும்பவும் கற்கிறேன் என்ற உணர்வுதான் ஏற்பட்டது. அந்த அளவிற்கு மிக உறுதியான அத்திவாரம் முன்னைய பள்ளியில் எமக்கு இடப்பட்டிருந்தது.

அங்கு, கற்களாகிய எங்களைக் கடுமையாகச் செதுக்கி உறுதி வாய்ந்த சிலைகளாக ஆக்கிவிட்ட ஆசிரியர்களை நான் எப்படி மறக்க முடியும்? இந்தவகையில் அமரர் த.பொ. குழந்தைவேலு அவர்களையும் நெஞ்சத்திருத்தி மனசார இன்னும் வணங்கி வருகின்றேன்.

(தொடரும்)

சிறுகதை

# நினைவுகள்

செ. பவானி

தை மாதக் கடல் அலைகள் மேலெழுந்து பொங்கி விளையாடின. நீலக்கடல் என்று ஏன் சொன்னார்கள்? நீருக்கு நிறமில்லை, மணமில்லை, குணமில்லை என்றார்களே. இந்த நீர் பச்சை நிறமில்லையா? இந்தச் சதிராட்டம் அதன் குணமில்லையா? பொங்கும் கடலலை குமுதினியைத் தாலாட்ட, வெளியில் நின்ற என் மனம் சிந்தித்துக்கொண்டது.

குமுதினி வலமும் இடமுமாகச் சரிந்து, வேகமாகச் சென்று கொண்டிருந்தாள். அந்த ஆட்டம் வயிற்றுள் ஏதோ செய்யத் தொடங்கியது. உள்ளே சிலர் வாந்தி எடுத்துக் கொண்டிருந்தார்கள், சிலர் கைகளில் தலையைச் சரித்து இருந்தார்கள். வானம் கறுக்கத் தொடங்கியது.

வெள்ளி நுரை மேலெழுந்து துள்ளிச் சிதற நீர்த்திவலைகள் காற்றில் வீசிப் பறந்தன. சூளும் கடலலை தாலாட்டும் சுந்தரத் தீவுக்கு வரவேண்டுமென்ற ஆவல் நிறைவேற நான் பயணித்துக் கொண்டிருக்கிறேன்.

பதினைந்து வருடங்களின் பின் ஊர் எப்படியிருக்கும்? அங்கே என்னை ஆவலுடன் வரவேற்க அம்மம்மாவோ, அப்பம்மாவோ, அப்புவோ யாரும் உயிரோடில்லை. இருந்தாலும் பெரியம்மாவைப் பார்க்கும் சாட்டில் நான் அங்கு போவது வேறு காரணம்.

குமுதினியின் ஆட்டத்தில் என் உடலும் ஆடத் தலைசுற்றுவது போல் இருந்தது. ஊருக்கேயுரிய ஒரே சொத்து. இடைக்கிடை இவள் நோய்வாய்ப்பட்டு நீண்ட நாள் படுக்கையில் இருந்துவிடுவாளாம். போதிய சிகிச்சையின்றி மீண்டும் எழுந்து ஒரு ராஜகுமாரிபோல இந்தப் பரந்த கடலில் பவனிவரும் மிடுக்கு ஊருக்கேயுரியது. மழை வரும்போல இருந்தது.

என் நினைவு பின்னோக்கி ஓடுகிறது. வெற்றிலைச் சாறு வாயில் மணக்க, வாரிக் கொஞ்சி மூச்சிழுத்து உச்சி முகரும் அம்மம்மா. அங்கு எல்லோருமே ஒருவரை ஒருவர் வாஞ்சையுடன், உறவின் உரிமையுடன் கொஞ்சி வரவேற்பது வழக்கம். அப்போது அருவருத்து இரகசியமாக முகத்தைக் கழுவிக் கொள்வேன்.

அம்மம்மா பாக்குரலில் வெற்றிலை இடிக்கும் அழகே தனி. மடுப்பெட்டி - அதன் ஒவ்வொரு அறையுள்ளும் வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு, காசுக்கட்டி, புகையிலை நுள்ளு.

அப்புவின் வல்லுவம் எனப்பட்ட துணிப்பை சுருட்டப்பட்டு மடியில் செருகப்பட்டிருக்கும். பட்டி நிறைந்த பசுவும், பனையின் பயன்கள் நிறைந்த வளவும், சாமையும் வரகும் மூடையாக வீடு நிறைந்த வருவோருக்கு வழங்கி மகிழ்ந்த வள்ளுவன் கண்ட இல்லறம். குடங்குடமாக நிறைந்து கிடக்கும் மோர். வாங்க வருவோருக்கு மோரைக் கொடுப்பதில்தான் எவ்வளவு மகிழ்ச்சி.

குமுதினி வேகமாக ஆடினாள். கம்பிச் சட்டத்தை இறுகப்பற்றுகிறேன். கடும் காற்றிலும் வெற்றிகரமாகப் பயணத்தை மேற்கொள்ளும் படகுகள் இவ்ள் இல்லாத வேளைகளில் கைகொடுக்கும். கதையை ஒருவர் சொல்லிக் கொண்டு வந்தார். ஊரவரின் திறமை உலகறிந்தது. எங்கு சென்றாலும் தமக்கெனத் தனிமுத்திரைபதிக்கும் அறிவாற்றல் அவ்வூரின் கொடை.

எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இங்கே இருந்தபடியால் எனக்கும் பெருமை.

வானம் இருண்டது. குளிர்காற்று வீசியது. குமுதினி கருமுகில் கண்டு களித்து ஆர்ப்பரிக்கும் கடலன்னைக்கு ஈடுகொடுப்பாளா? சதா பனிக்கட்டிக்குள்ளே சீவிக்கும் எனக்கு இந்தக் குளிர் இதமாக இருந்தது.

மேகம் தூறல்களைச் சீறத் தொடங்க வெளிப்புறத்துள் நின்றவர்கள் உள்ளே இறங்கினோம். குமுதினி கரகாட்டம் ஆடினாள். எனக்குப் பயம் ஏற்பட்டது.

'என்ன தம்பி பயப்படுகிறீர் போல'

பக்கத்தில் நின்றவர் அனுபவத்தோடு பேசினார். "உது உப்பிடித்தான் ஆட்டும்".

மனம் ஆசுவாசப்படுகிறது.

இதே குமுதினியில் இந்த நடுக்கடலில் இரத்த வெறியாட்டத்தில் தப்பிப்பிழைத்தவராம்...

இவற்றை நினைக்கக்கூடாது என்று மறக்க முயற்சிப்பதுண்டு. முடிவதில்லை. முடியாதபடி என் முதுகில் உள்ள வடு... எந்தவித காரணமும் இல்லாது சித்திரவதைக்குட்படுத்தப்பட்டு சிறையில் வாடிய அந்த நினைவுகள்...! சிலிர்த்துக் கொள்கிறேன் - இல்லை... எனக்கு எதுவும் நடக்கவில்லை. நான் சுவிஸ் நாட்டின் பிரசையாகப் பதியப்பட்டவன். அன்று பயங்கரவாதியாக்கப்பட்டு வதைக்கப் பட்டபோது சாவின் விளிம்பில் என்னை மீட்டெடுத்து தன் பணபலத்தால் அண்ணன் காப்பாற்றா விட்டால்...

நினைவுகள் பொல்லாதவை - அவை மறக்கப்பட வேண்டியவை - ஏழாற்றுப் பிரிவில் குமுதினி குதித்தாடினாள். சிறுவர்கள் பயத்தால் கத்தினார்கள். பெண்கள் 'அம்மாளே' என்று அன்னை நாகபூசணியை வேண்டிக் கொண்டார்கள். வாந்தியும் மயக்கமும் தொடர்ந்தது. ரிக்கற் புத்தகத்துடன் வரும் அதே தம்பிராசா மாமா வயதும் களைப்பும் முகத்தில் கோடிட்டிருந்தாலும், அதே வசீகரப் புன்னகை மாறவில்லை. இந்தக் கடலில்... தினமும் குமுதினியின் சேவையாளர்களை மனதுள் வியந்துகொள்கிறேன்.

சரியாக ஒரு மணித்தியாலம் கடலாடிய குமுதினி ஊரின் கரையை மெதுவாக அணைத்துக் கொண்டாள்.

எல்லாம் புதிய முகங்கள். துப்பாக்கி ஏந்தியபடி சில முகங்கள்... என்னை விநோதமாகப் பார்க்கும் பல கண்கள் - மாவலித்துறையில் கம்பீரமாக வரவேற்கும் தனிநாயகம் அடிகளின் அழகிய சிலை. துறைமுகத்தில் சிலமாற்றங்கள். பிரதான வீதியைவிட்டு ஒழுங்கையால் நடக்கின்றேன். அழகாக அடுக்கப்பட்டு வேலிகளாக விளங்கி நிற்கும் முருகைக் கற்பகிர்கள் நான் வருவது தெரிந்தால் என் பால்ய நண்பன் சின்னையா ஒரு வேளை வந்திருக்கக்கூடும். பனை வளவுகளூடாக ஒற்றையடிப் பாதை வழியே நடக்கிறேன். மாரி காலச் செழுமை வீதியெங்கும் பசுமை காட்டியது.

கருக்கு மட்டைகளால் வரியப்பட்ட சிறுபடலை. உள்ளே நுழைகிறேன் - வாசலில் கிடந்த கறுவல் நாய் பயங்கரமாகக் குரைத்தது. அடிவளவுள் நின்ற பெரியம்மா மெதுவாக வருகிறாள். கண்கள் இடுக்கி உற்றுப் பார்க்கிறாள்.

"இது ஆர் மோன..."

"பெரியம்மா.... நான் ராசன்... வெளிநாட்டால வந்திருக்கிறன்.."

"ஆ! என்ர அப்பு இஞ்ச வாடி..." பெரியம்மா என்னைக் கட்டிக் கொண்டு கண்ணீர்விட்டாள்.

"இந்தக் கட்டையையும் கண்ணில வைக்க வந்தனியே ராசா..." மீண்டும் கண்ணீர்...

சந்தோச மிகுதியால் பரபரக்கும் பெரியம்மா உடல் தளர்ந்து நடை தள்ளாடினாலும் தான் பிறந்த மண்ணையும் தன் பரம்பரைச் செல்வங்களின் இறுதி எச்சங்களையும் கட்டிக் காக்க வேண்டுமென்ற வைராக்கியம். சுத்தமான இந்தக் கிராமத்துச் சுவாத்தியம் எங்குமே இல்லையென அடித்துச் சொல்லியபடி தலைநகரில் வாழும் ஒரே மகளிடமிருந்து நழுவி வந்து தனித்து வாழும் சுதந்திர உணர்வு.

எதிர் வேலியில் ஓடிச்சென்று குரல் கொடுத்த சிறிது நேரத்துக்குப் பின் சின்னையா வந்தான். காதோரம் நரை அரும்பியிருந்தது வாடியிருந்தான் - பழைய முகமலர்ச்சியுடன் என்னைத் தழுவிக் கொண்டான்

"அட உங்களுக்கும் ஊர் நினைப்புக் கிடக்குதுதான்!"

பழைய நையாண்டிக் குணம் போகவில்லை. பெரியம்மா தேநீர் தயாரித்து வந்தாள் -

நான் வந்த சேதியறிந்து பலர் வந்தார்கள். சிலரை இனங் காணமுடிந்தது.

சமையலுக்கு உதவ பலர் வந்தனர்.

தனித்திருந்த வீடு களைகட்டியது.

இந்த உறவுப் பிணைப்பு எங்கும் கிடைக்காது.

இருள் கவிய முன் வெளியே சென்று வர சின்னையா சைக்கிளைக் கொண்டு



வந்தான். சைக்கிள் எனும்படியாக இரண்டு சில்லும் கறள்பிடித்து எண்ணையில் பளிச்சிட்ட செயினும் சான்றாக இருக்க அதில் என்னை ஏற்றி ஓடப் போவதை நினைக்க குமுதினியில் வந்ததை விட குலை நடுங்கியது.

"பயப்படாம ஏறு ராசன்"

ஊரின் நடுப்பகுதிவரை பிரதான வீதியால் சென்றோம். நிறையவே மாற்றங்கள். மின்சார வசதி கூடச் செய்யப்பட்டிருந்தது. வழியெங்கும் சின்னையா பேசிக் கொண்டே வந்தான். ஒரு குறிப்பிட்ட காலம் வெளியுலகத் தொடர்பற்றிருந்த நிலமையில் தன் குடும்பம் பட்ட அவலத்தைச் சொல்லும் போது குரல் தழுதழுத்தது. ஊருக்குள் கூலி வேலை செய்து கிடைக்கும் வருமானத்தை பெரும் திருப்தியாக எண்ணும் அங்கலாய்ப்பற்ற அவனது மனம் நிம்மதியான வாழ்வை வழங்கியிருந்ததை அவன் வீட்டுக்குச் சென்ற போது கண்டேன். வளங்களைச் சரிவரப் பயன்படுத்தத் தெரிந்த அவன் மனைவி, பிள்ளைகள் சுறுசுறுப்பாகக் காணப்பட்டார்கள்.

மதவடி வீதியால் உள்ளே திரும்ப, நிரம்பிக் கிடந்த குளம் என்னைக் கவர்ந்தது - மஞ்சவண்ணா மர நிழலில் மணிக்கணக்காக நண்பர்கள் கூடியிருப்பதும் விளையாடுவதுமாக கழிந்த காலங்கள் போக மனதைக் குடைந்து கொண்டிருக்கும் வினாவுக்கு விடைதேடி சண்ணாங்குளக் கட்டில் போய் அமர்ந்தோம் - புல்வெளியில் இரை தேடிய வெண் கொக்குகள் வரிசையாக எழுந்து பறந்தன.

"ராசன் நீ என்ன யோசிக்கிறாயெண்டது கொஞ்சம் விளங்குது" சின்னையா கூறினான். "நான் இங்க வந்த காரணம் முக்கியமாக அது தான் சின்னையா!"

"அது முடிஞ்சுபோன கதை" சின்னையா விரக்தியாகக் கூறினான்.

அடர்ந்து வளர்ந்து உயர்ந்து நிற்கும் பனைகளை நோக்குகிறேன். கல்லூரி விடுமுறை காலங்களில் ஊருக்கு வரும் வேளையில் எல்லாம் மனங்கவர்ந்த ஆனந்தி... எங்கள் இருவருக்கும் தூதாகச் சின்னையா. இராணுவத்தால் நான் கைது செய்யப்பட்ட பின் எதுவுமே என் மனதில் இல்லாமல் போய் விட்டது. ஆனந்தி குடும்பம் இந்தியாவுக்குப் புலம் பெயர்ந்து சென்றது மட்டும் அறிந்தேன்.

"ராசன் அவளுக்குக் கல்யாணமும் முடிஞ்சு..." நான் எதிர்பார்க்கவில்லை. ஆனால் அதிர்ச்சியடையவில்லை. இருவருக்கும் தொடர்பற்று, நான் நாட்டை விட்டுச் சென்ற பின் அவளின் நிலை பற்றி எதுவும் தெரியாமல் போனதற்குக் காலச்சூழ்நிலை காரணமாகிவிட்டது.

...வாழ்க்கையும் முடிஞ்சு போச்சு" சின்னையா பெருமூச்சு விட்டான்.

அவளின் துயரக் கதை... மனதை வருத்தியது. ஏதோ ஒரு எதிர்பார்ப்பில் எனக்காகச் சில வேளை அவள் காத்திருக்கலாம் என்ற நப்பாசையில் வந்த எனக்கு ஏமாற்றம். "இவ்வளவு தூரம் வந்திட்டாய் அவளின்ர வீட்டை போவம்" சின்னையாவின் சைக்கிள் உருண்டது.

ஆனந்தி கோலம் மாறியிருந்தாள். பாரிசவாதத்தால் படுக்கையில் கிடக்கும் கணவன். இரண்டு பிள்ளைகள். இவள் பாடுபட்டு குடும்பத்தைக் கொண்டிழுக்கிறாள். என்னைக் கண்டு எந்தவித ஆவலையும் வெளிப்படுத்தவில்லை. தாங்கள் இடம்பெயர்ந்தது, அங்கேயே கணவன் நோய்வாய்ப் பட்டது, திரும்பி வந்தது இவற்றை வெகு சாதாரணமாகச் சொல்லிக் கொண்டிருந்தாள். நாணமும் மகிழ்ச்சியுமாக என்னைக் கண்டால் கதைக்கவே வெட்கப்படும் ஆனந்தியை ஒரு கணம் மனதில் நிறுத்துகிறேன். ஏற்றுக்கொண்ட வாழ்க்கையைப் பக்குவமாக நடத்தும் அவளின் சலனமற்ற உறுதி என் ஏமாற்றத்தைத் துடைத்துவிட்டது.

இரண்டு நாட்கள் ஊரில் நின்றுவிட்டு சின்னையாவையும் அழைத்துக் கொண்டு யாழ்.திரும்புகிறேன். பெரியம்மா சந்தோசமாக எனக்கு விடை கொடுத்தாள். உறவுகள் சொல்லி வந்த இனசனத்தை இங்கு தவிர எங்கும் காண முடியாது. இந்தக் கடல் கடந்துவிட்டால் யந்திரமான உலகம். அமைதியும் ஆத்ம திருப்தியும் இந்த இயற்கை வளத்தில் கிடைத்ததையிட்டு மனம் லேசாகிறது.

குமுதினி காலைக் கதிரவனின் அமைதியான அணைப்பில் நல்ல பிள்ளையாக ஓடிக் கொண்டிருக்கிறாள். "கடல் பேசாமல் கிடக்குது பார்" சின்னையா கூறுகிறான். என்மனமும் அவனுக்குத் தெரிந்திருக்குமோ...?

★

## கண்ணே உறங்குறங்கு...

சொப்பன வலையை அறுத்துவிடாதே...
சுருண்டு கிட அதற்குள்ளே...
போதை மூட்டம்
கலையாமற் பார்த்துக்கொள்
விழித்தல் நிகழாதொழியட்டும்...
நம்பு...
அது அன்புதான்...
இனிக்கும் வார்த்தைகள்
சத்தியம்!
புன்னகையின்
நேசம் மெய்!
உபசரிப்பின் பரிவு
மெய்!
பற்றிக் கொள்ளும்
கையின் இறுக்கம்...
உதவ முன்வரும்
மனசின் தாராளம்...
தலைசாய்க்கும்
மடியின் இதம்...
எல்லாமும் உண்மை...
நம்பு! நம்பு!
மனதிற் கவிந்த
பிரமைகளின் லாகிரி
தொடர்ந்துன்னைத்
தாலாட்டட்டும்
நிஜமறியும் உந்தல்
உரைத்துப் பார்த்து
உண்மையறியும் எண்ணம்
அதைப் புறக்கணி...
நிஜத்தின் குரூர முகதரிசனத்துக்கு
ஏனிந்த ஏக்கம்...?
இருளிலேயே இரு நீ!
கலையா மயக்கத்தில்
இருளின் அழகுபாடு!
வாழிய நீ...
வளர்க நின்துயில்...



ந. சத்தியபாலன்

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*நாணயத்திற்கு எப்போதும் இரண்டு பக்கங்கள் உண்டு.*
*- தமிழ்ப் பழமொழி.*

# நமது நோக்கு

## ஒரு தரப்புக்கு மட்டுமே!

புரிந்துணர்வு உடன்பாட்டின் ஒரு வருட பூர்த்தியை முன்னிட்டு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தொலைக் காட்சிக்கு அளித்த நேர்காணல் - இந்த உடன்பாட்டினை மதிப்பதிலும், தொடர்வதிலும் அவருக்கிருக்கும் ஈடுபாட்டையும், ஆர்வத்தையும் காட்டியிருக்கிறது.

அதேவேளை - அவர், தனது நேர்காணலில் பல இடங்களிலும் குறிப்பிட்ட விடயங்கள் - தற்போது நடந்து வரும் அமைதி முயற்சிகள் புறந்தள்ளப்பட்டால், அல்லது பின்னடைவைச் சந்திக்குமானால் - அது, நாட்டையே பேரழிவுக்கு இட்டுச் சென்றுவிடும் என்பதை வலியுறுத்துவனவாக அமைந்திருந்தன.

ரூபவாஹினி, சிரச, சுவர்ணவாஹினி என மூன்று தொலைக்காட்சிச் சேவைகளின் செய்தியாளர்களும் எழுப்பிய கேள்விகள் - சில தடவைகள் - பிரதமர் ரணிலிடமிருந்து, விடுதலைப் புலிகளுக்கு எதிரான அல்லது அமைதிச் பேச்சுக்களில் அவர்களது பங்கேற்பை விமர்சனம் செய்யக்கூடியவகையில் கருத்துக்களைப் பெறும் விதமாகவே கொண்டு செலுத்தப்பட்டிருந்தாலும்,

அவற்றுக்குப் பிரதமர் ரணில் அளித்த பதில்கள் - தெற்கில் எழுந்துவரும் விஷமப் பிரசாரங்களுக்கான பதில்களாகவும் அமைந்திருந்ததைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்.

குறிப்பாக - போர்நிறுத்த மீறல்கள் தொடர்பாகவும், விடுதலைப் புலிகள் தமது படைகளுக்குச் சிறார்களைச் சேர்ப்பது பற்றியும் - தொலைக்காட்சிச் செய்தியாளர்கள்- மிக நீண்ட தமது தரப்புக் 'கதைகளின்' பின்னர், தாம் விரும்பிய வடிவில் பதிலொன்றைப் பெற முயற்சித்தபோது-

விடுதலைப் புலிகள் சமாதானத்தின் மீது கொண்டுள்ள விசுவாசம் பற்றித் தனக்குள்ள நம்பிக்கையை வெளிப்படுத்திய ரணில் - புலிகள், தனது அரசாங்கம் மீதே சந்தேகப்படுவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதையும் யதார்த்தபூர்வமாக வெளிப்படுத்தினார்.

கடந்தகால அரசாங்கங்களின் செயற்பாடுகள் தந்த அனுபவங்கள்- இனப்பிரச்சினையை அவர்கள் கையாண்ட விதம் - ஆகியவற்றின் அடிப்படையில் விடுதலைப் புலிகளுக்கு - கொழும்பு அரசாங்கம் மீது நம்பிக்கையீனங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்பே இருப்பதாக அவர் குறிப்பிட்டதானது - கடந்த ஆட்சியாளர்களின் தவறுகளை, சிங்கள மக்களுக்கு நினைவுபடுத்துவதாக அமைந்திருந்தது.

அதேவேளை - கடந்தகால ஆட்சியாளர்கள் விட்ட தவறுகளை - ஏமாற்றுத்தனங்களை - ரணில் விட்டுவிடக் கூடாதென்ற பொறுப்புணர்வையும், அவரது கருத்தே அவர் மேல் சுமத்தியிருக்கிறது.

இதேவேளை - விடுதலைப் புலிகளுடன் இணைந்து எட்ட முயற்சிக்கும் அரசியல் தீர்வில், அரசாங்கத்திற்குள்ள நாட்டத்தை வெளிப்படுத்திய அவர் - மக்கள் ஐக்கிய முன்னணி - பொதுஜன ஐக்கிய முன்னணிக் கூட்டு சமாதான நடவடிக்கைகளுக்கு எதிரான போக்கிலும் செல்வதைப் பகிரங்கமாகச் சாடியிருக்கிறார்.

அத்துடன், உயர்பாதுகாப்பு வலய விவகாரத்தில்- விடுதலைப் புலிகளையும், அரசாங்க்த்தையும் பாதிக்காத வகையில் சுமுகமான தீர்வொன்றையும் காண முயற்சிக்கப்போவதாக அவர் அறிவித்திருக்கிறார்.

இந்தவகையில் - புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னரான - அரசாங்கத்தின் நிலைப்பாட்டினையும் அமைதியை உறுதிப்படுத்துவதற்கான சாதகமான கருத்துக்களையும், விடுதலைப் புலிகளின் பங்கேற்பின் அர்ப்பணிப்பையும், எதிர்க்கட்சிகளின் குறுகிய அரசியல் இலக்குகளையும் வெளிக்காட்டியிருக்கும் பிரதமர் ரணிலின் நேர்காணல் பாராட்டுக்குரியதாயினும்,

- தமிழ்மக்களின் ஒரு வருட எதிர்பார்ப்பை இதுவரை நிறைவேற்ற முடியாதிருக்கும் அரசாங்கத்தின் தலைவரென்ற ரீதியில் அவரது விளக்கமோ, நிலைப்பாடோ இல்லாமல் போனதும்,

அதுபற்றித் தொலைக்காட்சிச் செய்தியாளர்கள் கவலைப்படாததும் வியப்பிற்குரியதாகவும், நெருடலாகவுமே இருக்கிறது.

பிரதமர் ரணிலுக்கான கேள்விகளும், அவரது பதில்களும்- சிங்கள மக்களுக்குரியனவாக, அவர்களது சந்தேகங்களைத் தீர்க்க முயற்சிப்பனவாகவே இருந்ததிலும் - தமிழ்மக்கள் ஏமாற்றமடைந்திருப்பதையும் குறிப்பிட்டாக வேண்டியிருக்கிறது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் அரசாங்கத்தின் செயற்பாடுகளில் ஏற்பட்ட தாமதங்கள், படையினரின் அத்துமீறல்கள், போராளிகள் மற்றும் பொதுமக்கள் மீதான தாக்குதலகள், உயர்பாதுகாப்பு வலயத்தினால் ஏற்பட்டுள்ள மனிதாபிமான நெருக்கடிகள், தொடரும் கெடுபிடிகள், வட- கிழக்கில் அரசாங்க அமைச்சர்களின் கண்காட்சி மற்றும் கண்துடைப்பு விஜயங்கள் என இன்னோரன்ன விடயங்களுக்குமான விளக்கமெதுவுமே பிரதமர் ரணிலிடமிருந்து கிடைக்கவில்லை என்பது மிக முக்கியமானதாகின்றது.

ஒருவகையில் - தாம் பிரதிநிதித்துவப்படுத்தும் சிங்கள மக்களுக்கான நேர்காணலாகவே நேற்று முன்தினத்தைய பிரதமர் ரணிலின் தொலைக்காட்சி நிகழ்ச்சி அமைந்திருப்பதாகவே கருதமுடிகின்றது.

# வெடிபொருள் இறக்குமதி செய்யும் அனுமதி தனியார் வர்த்தகருக்கு!

## மோசடி இடம்பெற்றதாகச் சர்ச்சை

(கொழும்பு)

வெடிபொருட்களை இறக்குமதி செய்யும் உரிமை தனியார் வர்த்தகர் ஒருவருக்கு வழங்கப்பட்டமை தொடர்பாக சர்ச்சைகள் எழுந்திருக்கின்றன.

பட்டாசுகள் தயாரிப்பு மற்றும் கற்களை உடைத்தல் போன்ற தேவைகளுக்காக வெடிபொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டு வருகின்றன. இவற்றை அரசாங்க வர்த்தகத் திணைக்களமே இறக்குமதிசெய்து வந்தது.

122 முகவர்கள் மூலம் உள்துறை அமைச்சே இந்த வெடிபொருட்களை விநியோகிக்கும் அங்கீகாரத்தை வழங்கியிருந்தது.

ஆனால், கடந்த மாதம் இறக்குமதி உரிமை தனியார் வர்த்தகருக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இதனால் குற்றச் செயல்கள் அதிகரிக்கலாம் எனப் பொலிஸார் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. வெடிபொருள் இறக்குமதி தனியாருக்கு வழங்கப்பட்ட விடயத்தில் மோசடிகள் இடம்பெற்றிருப்பதாகவும் கூறப்படுகிறது.

## தமிழ்க் கட்சித் தலைவர்களுடன் இடதுசாரிக் கட்சிகள் பேச்சு!

(கொழும்பு)

கொழும்பில் இடதுசாரிக் கட்சிகளுக்கும் சில தமிழ்க் கட்சிகளுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று இடம்பெற்றிருக்கிறது. நேற்று முன்தினம் இச்சந்திப்பு இடம்பெற்றதாகத் தெரியவருகின்றது.

லங்கா சமசமாசக் கட்சி மற்றும் கம்யூனிஸ் கட்சி ஆகியவற்றைச் சேர்ந்த தலைவர்களான பட்டி வீரக்கோன், ராஜா கொளுரே, டி.யு.குணசேகர ஆகியோர் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

ஈ.பி.டி.பியின் சார்பில் அதன் செயலாளர் டக்ளஸ் தேவானந்தா, புளொட் தலைவர் சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எவ் வரதர் அணி சார்பில் சுபத்திரன் ஆகியோர் இச்சந்திப்பில் கலந்துகொண்டதாகத் தெரியவருகின்றது.

இச்சந்திப்பில் சமாதான முயற்சிகள், பேச்சுக்களின் போக்கு, யுத்தநிறுத்த அமுலாக்கம் உள்ளிட்ட பல விடயங்கள் பேசப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

## கண்காணிப்புக்குழு புதிய தலைவர் மார்ச் 7 இல் பொறுப்பேற்பார்!

(கொழும்பு)

இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் புதிய தலைவராக மேஜர் ஜெனரல் ட்ரைகேவ் ரெலவ்சன் அடுத்த மாதம் 7 ஆம் திகதி பொறுப்பேற்கவுள்ளார் எனத் தெரியவருகின்றது.

அதற்கு முன்னோடியாக அரசு மற்றும் புலிகள் தரப்பு உயர் மட்டத் தலைவர்களுடன் கலந்துரையாடுவதற்காக நேற்று முன்தினம் கொழும்பு வந்தார்.

இவர் - ஜனாதிபதி சந்திரிகா, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அமைச்சர்கள் ஜி.எல்.பீரிஸ், மிலிந்த மொறகொட ஆகியோருடனும் முப்படைத் தளபதிகளுடனும் பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

அத்துடன் வன்னியில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன், அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஆகியோருடனும் இவர் கலந்துரையாடல்களை நடத்துவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# திடகாத்திரமான சிந்தனை உருவாக விளையாட்டுக்கள் அவசியமாகும்!

## நெல்லியடியில் நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டியில் உரை

(நெல்லியடி)

"மாணவர்களின் கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஆசிரியர், பெற்றோர்கள் இணைந்து செயற்படவேண்டும். அப்போதுதான் எதிர்காலத்தில் நாட்டிற்கு நற்பிரஜைகள் உருவாகுவார்கள். அவர்களினால் நாட்டை சுபீட்சப் பாதையில் இட்டுச்செல்லமுடியும். அத்துடன் மாணவர்கள், கல்வியுடன், விளையாட்டு மற்றும் இணைப்பாட விதான நடவடிக்கைகளிலும் ஈடுபடவேண்டியது முக்கியமானதாகும்"

- இவ்வாறு நெல்லியடி மத்திய மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய கொழும்புப் பல்கலைக்கழக கல்வியியல் துறை விரிவுரையாளர் கலாநிதி எம்.கருணாநிதி குறிப்பிட்டார். இப் போட்டிகள் மகா வித்தியாலய அதிபர் எஸ்.சேதுராஜா தலைமையில் நடைபெற்றன. தொடர்ந்து உரையாற்றிய கலாநிதி எம்.கருணாநிதி மேலும் தெரிவித்ததாவது:-

இவ்வித்தியாலயம் கல்வியுடன் விளையாட்டுத்துறை, இணைப்பாடவிதான செயற்பாடுகளில் முன்னணியில் திகழ்வது பாராட்டப்பட வேண்டியது ஆகும். திடகாத்திரமான உடலைக் கொண்ட மனிதனிடம் திடமான சிந்தனையை உருவாக்க முடியும். விளையாட்டு - மனித உடல், உள வளர்ச்சிகளை மேம்படுத்த உதவும். இதுவே மனித இலட்சிய வெற்றிக்கு வழிவகுக்கும்.

மாணவர்களின் ஆளுமை விருத்தி மேம்படவேண்டும். அப்போதுதான் அவர்கள் வாழ்க்கையில் வெற்றிபெற முடியும். இன்றைய மாணவர்கள் விளையாட்டுக்களிலும் இணைப்பாட விதான செயற்பாடுகளிலும் அதிக கவனம் செலுத்தாதமையே அவர்களது ஆளுமை விருத்தி தடைப்படக் காரணமாகிறது. இவ்வித்தியாலயம் சகல துறைகளிலும் அபிவிருத்தி அடைய வேண்டும் என்று கூறிய அவர் - விளையாட்டுக்களில் வெற்றி பெற்ற வீரர்களுக்கும் வீராங்கனைகளுக்கும் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார்.

## மேலும் எலும்புக்கூடுகள் திருமலையில் கண்டுபிடிப்பு

(திருகோணமலை)

திருகோணமலை - பெரியகடை உல்லாசக் கடற்கரைப் பகுதியிலிருந்து நேற்றுமுன்தினம் மேலும் மனித எலும்புகள் மீட்கப்பட்டன.

கடந்தவாரம் இப்பகுதியில் கட்டட வேலைகளுக்காகக் குழிதோண்டிய நகரசபைத் தொழிலாளர்களால் இரண்டு மனிதப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றிலிருந்து மனிதஎலும்புத் தொகுதிகள் இரண்டு மீட்கப்பட்டிருந்தன.

இந்தநிலையில் நேற்றுமுன்தினம் மேலும் பல எலும்புத் தொகுதிகள் கண்டுபிடிக்கப்பட்டு மீட்கப்பட்டிருக்கின்றன. இது தொடர்பாக மேலதிக விசாரணைகளும் இடம்பெற்று வருகின்றன.

இவை திருகோணமலைப் பகுதியில் காணாமற்போனவர்களுடைய எலும்புக்கூடுகளாக இருக்கலாம் என அப்பகுதி மக்கள் பேசிக்கொள்கின்றனர்.

## உயர் பாதுகாப்பு வலயப் பிரகடனத்தால்

## சாவகச்சேரி நகர சபையின் செயற்பாடுகளுக்குப் பாதிப்பு

(சரசாலை)

தென்மராட்சியில் உள்ள கண்ணாடிப்பிட்டி - தனங்கிளப்பு பிரதேசங்களை இராணுவத்தினர் அதியுச்சப் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தியிருப்பதால் சாவகச்சேரி நகரசபையின் பல செயற்பாடுகளை மேற்கொள்ளமுடியாதநிலை ஏற்பட்டிருக்கிறது.

கழிவுப் பொருட்கள், குப்பைகள் போன்றன முன்னைய காலங்களில் இப்பகுதியிலேயே கொட்டப்பட்டன. மேலும் இறைச்சிக்காக ஆடு, மாடுகளை வெட்டும் கொல்களமாகவும் இப்பிரதேசமே பயன்படுத்தப்பட்டுவந்தது.

கடந்தகால யுத்த நடவடிக்கைகளிற்குப் பின் இராணுவத்தினர் கண்ணாடிப்பிட்டி - தனங்கிளப்பு பிரதேசத்தை தமது அதியுச்சப் பாதுகாப்பு வலயமென பிரகடனப்படுத்தினர். இதனால் நகரசபையின் செயற்பாடுகள் பாதிப்படைந்துள்ளன.

## சிறிலங்கா சுதந்திரக் கட்சியை ஜே.வி.பி ஆட்டிப் படைக்கின்றது

### மாதுளுவாவே சோபிததேரோ கருத்து

புகழ்பெற்ற கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியை ஜே.வி.பி. இன்று ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கிறது என்று மாதுளுவாவே சோபித தேரோ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது - அரசாங்கத்தின் சமாதான முயற்சியை எதிர்க்கட்சிகள் இன்று எதிர்த்துக் கொண்டிருக்கின்றன. அரசாங்கம் விரைவில் ஒரு இறுதியான அரசியல் தீர்வுத் திட்டத்தை முன்வைக்கவேண்டும்.

பேச்சுக்களின் மூலம் காணப்பட்ட தீர்வை நாடாளுமன்றத்தில் அரசாங்கம் முன்வைக்கும்போது அதனை எதிர்க்கட்சிகள் நிராகரிப்பது புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கே வாய்ப்பானதாகிவிடும்

தனிநாட்டுக் கொள்கையை அது நியாயப்படுத்திவிடும் என்பதை சமாதான முயற்சிகளை எதிர்க்கும் கட்சிகள் புரிந்து கொள்ளவேண்டும் என்றும் மாதுளுவாவே சோபித தேரோ மேலும் தெரிவித்தார்.

# ஜனாதிபதி சந்திரிகாவிடம் அரசியற் தீர்வை எதிர்பார்க்க முடியாத நிலையில் தமிழ்மக்கள்

சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு அரசியல் சாணக்கியம் கிடையாது - இவ்வாறு கூறியவர் லண்டன் லூசியன் நகர



முன்னாள் மேயர் சின்னமணி. இவர் 1995 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கைக்கு வந்திருந்தபோது கொழும்பில் இருந்து வெளியாகும் தமிழ்த் தினசரி ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே இவ்வாறு தெரிவித்திருந்தார். இவர் சந்திரிகாவை அன்று மிக எளிதில் எடைபோட்டிருந்தார் என்பதே உண்மை.

இந்த முன்னாள் மேயர், சந்திரிகாவைப் பற்றிக் கூறிய கருத்துக்கும் சந்திரிகா இன்று நடந்து கொள்ளுகின்ற அரசியல் நடைமுறைகளுக்கும் எந்த வேறுபாடுகளும் காணப்படவில்லை. ஜனாதிபதி சந்திரிகாவின் இன்றைய நகர்வுகள் ஒரு ஆபத்தான அரசியலை நோக்கியே சென்று கொண்டிருக்கின்றது. குறிப்பாகச் சொல்லப் போனால் இன்று ஐக்கிய தேசிய முன்னணி அரசினால் ஆரம்பிக்கப்பட்ட சமாதானப் பேச்சுவார்த்தையை என்ன விலை கொடுத்தேனும் தோல்வியடையச் செய்ய வேண்டும். இதற்காக நான் எந்தப் பேயோடும் கூட்டுச் சேரத் தயார் என்ற நிலையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு- ஒரு பெரும் பயங்கர எதிரியாகவும், இன்று ஜனாதிபதியாக இருக்கின்ற சந்திரிகாவின் கணவர் குமாரதுங்கவின் கொலைக்குக் காரணமானவர்கள் எனக் கூறப்படுபவர்களுமான ஜனதா விமுக்தி பெரமுனவுடன் கூட்டுச் சேர்ந்துள்ளார்.

அத்தோடு வேறு யார் யார் கூட்டாகச் சேர முன்வருவார்களோ அவர்களையும் அரவணைக்கத் தவறமாட்டார் அவர்.

ஜனாதிபதி சந்திரிகா 1995 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தபோது, இனப்பிரச்சினைத் தீர்வை தேர்தல் பிரசாரமாகச் சிங்கள மக்கள் மத்தியில் முன்வைத்து 62 வீதத்திற்கு மேல் வாக்குகளையும் பெற்று மக்களின் ஆணையை வென்றிருந்தார். அதற்குப் பின்னரும் கூட ஜனாதிபதித் தேர்தலிலும் அதனையே முன் வைத்து ஆட்சியைக் கைப்பற்றினார். ஆனால் மக்கள் வாக்களித்தும் அவரால் சமாதானத் தீர்வைக் காணமுடியவில்லை.

மாறாக யுத்தத்தில் நம்பிக்கை கொண்டு - மூர்க்கத்தனமான ஒரு கொடிய யுத்தத்தை ஆரம்பித்தார். அதனால் விழைந்தது என்ன? அப்பாவித் தமிழ்மக்கள் ஆயிரக் கணக்கானோர் மாண்டனர். மேலும் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட சிறுவர்கள் பெற்றோரை இழந்தனர். யாழ். மாவட்டத்தில் அறுநூறுக்கும் மேற்பட்ட இளைஞர்கள், யுவதிகள் காணாமல் போயினர். இவர்களில் அநேகர் எலும்புக்கூடாக மீட்கப்பட்ட சம்பவங்களும் உண்டு.

இத்தனைக்கும் மேலாக ஜனாதிபதி சந்திரிகா- பொதுஜன ஐக்கிய முன்னணியின் பிரதமராக ஆட்சிக்கு வரும்போது, "நானும் ஒரு விதவை, எனக்கும் பிள்ளைகள் இருக்கின்றனர், எனது கரங்கள் இரத்தக்கறை படியாத கரங்கள்" என்றும் அவரே கூறியிருந்ததும், பின்னர் அவரது ஆட்சியில் அவர் கூறிய கூற்றுக்களுக்கு எதிராக நடந்துகொண்டதையும் இங்கே நினைவில் கொள்ளலாம்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் - விடுதலைப் புலிகளுடன் ஏற்படுத்தப்பட்ட சமாதான ஒப்பந்தம் ஒரு வருடத்தைப் பூர்த்தி செய்துள்ளது. இந்த நேரத்திலும் கூட ஜனாதிபதி சந்திரிகா - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து இனப்பிரச்சினைத் தீர்வில் ஒத்தாசை காட்டி அதை ஒரு நல்ல முன்னேற்றகரமான நிலைக்கு இட்டுச்செல்ல முன்வரவில்லை. மாறாக அதற்கு எதிராக எதனைச் செய்ய முடியுமோ? எதனைச் சாதிக்க முடியுமோ? அதனைச் செய்யவே முனைகிறார். இவரிடத்தில் உதட்டில் ஒன்றுமாக, உள்ளத்தில் ஒன்றுமாகப் பேசும் தன்மையே காணப்படுகிறது.

தற்போது ஏற்பட்டுவரும் சமாதான முயற்சியை முறியடிக்க இதனை எதிர்க்கும் கட்சிகளைத் தான் இணைத்துக்கொண்டு சமாதான முயற்சியை வெற்றியடையச் செய்வதில் பெரும் தடை போட்டு வருகின்றார். இவர் சகல நிறைவேற்று அதிகாரங்களையும் கொண்ட ஜனாதிபதி. இவர் விரும்பினால் தமிழ்பேசும் மக்களின் தீர்வில் தனது முழு ஆதரவையும் வழங்கி, ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்து இதில் வெற்றிகாண முடியும். ஆனால், அதனை விரும்பவில்லையென்பதே அவரது அரசியல் நிலைப்பாடு வெளிக்காட்டி நிற்கின்றது.

### யோ


உண்மையில் ஜனாதிபதி சந்திரிகா ஒரு போதும் சமாதானத் தீர்வுக்கு ஆதரவாக இருக்க மாட்டார் என்பது வெளிப்படையாகியிருக்கிறது.

இவருடைய தந்தை, தாயாரின் ஆட்சிக்காலத்தை எடுத்துப் பார்த்தாலும், அவர்களது அரசியல் நீரோட்டத்திலும் தமிழ் மக்களுக்கு எந்தச் சுதந்திரமும் கிடைக்கப் பெறவில்லை. அதே பெற்றோருக்குப் பிள்ளையாகப் பிறந்த ஜனாதிபதி சந்திரிகா தமிழ் மக்களுக்கு விமோசனத்தைப் பெற்றுக்கொடுப்பாரா என்று நம்பிக்கொண்டிருக்க முடியாத நிலையை - அவரே மக்கள் மத்தியில் ஏற்படுத்தி விட்டார் என்பதே உண்மை.

# அழிவை ஏற்படுத்தக் காத்திருக்கும் உயிர்கொல்லும் இரசாயன ஆயுதங்கள்

இரசாயன ஆயுதங்கள் மனிதர்கள், தாவரங்கள், விலங்குகள் என்பனமீது நச்சுத் தன்மையை ஏற்படுத்துமுகமாகப் போர்முனையில் பிரயோகிக்கப்படும் திண்ம, திரவ, வாயு வடிவப் பதார்த்தங்களாகும். 1925 ஆம் ஆண்டின் ஜெனீவா சாசனப்படி இவற்றை உபயோகித்தல் தடைசெய்யப்பட்டுள்ளது. இச் சாசனத்தில் 140 இற்கும் மேற்பட்ட நாடுகள் கையொப்பமிட்டுள்ளன.


சேதன பொஸ்பேற்று சேர்வையால் தயாரிக்கப்பட்ட, நரம்பு மண்டலத்தைத் தாக்கக் கூடிய - இரசாயன ஆயுதம் இரண்டாம் உலகப் போரில் ஜேர்மனியால் தயாரிக்கப்பட்டது. இது ஒருவகைப் பூச்சி கொல்லி ஆகும். எனினும் போர் முனையில் பிரயோகிப்பதற்காக இது பன்மடங்கு செறிவூட்டப்பட்டது. கடும் வியர்வை, சுவாசப்பை பாதிப்பு,



இரசாயன ஆயுதங்களை உள்ளடக்கக் கூடிய 155 மி.மீ. ஷெல்.

கண்பார்வையை மங்கச் செய்தல், கடும் வாந்தி, வயிற்றோட்டம், தசைச் சுருக்கம், சுவாசத் தொழிற்பாட்டை நிறுத்துதல் என்பனவற்றை இந்த இரசாயன ஆயுதங்கள் ஏற்படுத்த வல்லன.

அமெரிக்காவும், ரஷ்யாவும் நரம்புத் தொகுதியைத் தாக்கவல்ல சரைன் (**Sarine**), வி.எக்ஸ் (**V.X**), சாமோன் (**Samon**) போன்ற இரசாயன ஆயுதங்களைப் பெருமளவில் களஞ்சியப்படுத்தி வைத்துள்ளன. சரைன் வாயு திரவ வடிவானது. எனினும் விரைவில் ஆவியாகி நரம்பு மண்டலத்தைத் தாக்கும்.



இரசாயன ஆயுதங்களை வீசத்தக்க 155 மி.மீ. ஆட்லறி

வி.எக்ஸ் வாயுவானது தொடுகை மூலம் நச்சுத்தன்மை, தோலில் கொப்புளங்கள் என்பனவற்றை ஏற்படுத்தும். சாமோன் வாயுவானது தொடுகையாலும், சுவாசத்தாலும் விரைவான பாதிப்பை ஏற்படுத்தும், இவற்றுடன் மஸ்ராட் வாயு (**Mustard Gas**), லீசற் வாயு (**Lewisite Gas**) தோலை எரிக்கும் சி.எஸ். (**C.S**) வாயு என்பனவற்றையும் இருப்பில் வைத்துள்ளன. மஸ்ராட், லீசற் என்பன கண் பார்வையிழப்பு, தோலில் கொப்புளங்கள் என்பனவற்றை ஏற்படுத்துவதுடன் மரணத்தையும் ஏற்படுத்தவல்லன. இவற்றில் லீசற் வாயு உடனடித் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியது.

இத்தகைய ஆயுதங்களை இதற்கெனப் பிரத்தியேகமாகத் தயாரித்த ஆட்டிலறி எறிகணைகள், ஏவுகணைகள், சிலின்டர்கள் என்பன மூலம் புகைத் தூமங்களாகவோ, திரவங்களை விசிறுவதன் மூலமோ உபயோகிக்கமுடியும். சிலின்டர்களில் நிரப்பி விமானம் மூலமும் விசிறலாம். இவற்றின் அடர்த்தியை அதிகரிப்பதன் மூலமும், சரியான இலக்கில் பிரயோகிப்பதன் மூலமும் தாக்கத்தை அதிகரிக்கலாம்.

அமெரிக்கா இவற்றை உற்பத்திசெய்வதில் 1987 இல் புதிய தொழில்நுட்பத்தைக் கண்டுபிடித்தது. சரைன் வாயுவை உருவாக்கும் இரண்டு வாயுக் கலவைகளைத் தனித்தனியாக உற்பத்தி செய்து போர்முனைக்கு எடுத்துச்சென்று, அங்கு ஒன்று சேர்த்து உபயோகிப்பதே அம்முறையாகும். இதன் மூலம் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுவதனால் களஞ்சியப்படுத்தலும், இடம்மாற்றுவதும் இலகுவாக இருக்கும்.

போர் முனையில் இரசாயன வாயுக்களைப் புகையாக அல்லது தூமமாகப் பயன்படுத்துவதால் எதிரிக்கு ஏற்படுத்தும் தாக்கத்தின் அளவை வளிமண்டலத்தின் அசைவு பெருமளவு பாதிக்கின்றது. பாதுகாப்பற்ற நிலையில் உள்ள எதிரிக்குக் கணிசமான அளவு சேதத்தை விளைவிப்பது எனில் ஒரு சதுர மைல் பிரதேசத்திற்குக் குறைந்தது கால் தொன்னிலிருந்து பத்து தொன்வரை இரசாயன ஆயுதங்கள் தேவைப்படும்.

எதிர்த்தரப்புப் படையினர் நவீன இரசாயன ஆயுத எதிர்ப்பு உபகரணங்களை உபயோகிப்பதன் மூலம் இவற்றிலிருந்து தகுந்த பாதுகாப்



விமானத்திலிருந்து இரசாயன ஆயுதங்களை கொண்டு செல்லும் ஏவுகணைகள்

பைப் பெறமுடியும். இப்பாதுகாப்பு உபகரணங்களாக முகமூடி, பாதுகாப்பு உடை, நகர்த்தக்கூடிய இரசாயன ஆயுதப் பாதுகாப்புக் கூடாரங்கள், வாகனங்கள் என்பன உபயோகிக்கப்படும். கூடாரத்தின் துணிகளில் இரசாயன வாயுவில் உள்ள காபனை உறிஞ்சக் கூடிய நிலக்கரி பூசப்படும். முகமூடிகளில் வாயுவை வடிகட்டக்கூடிய உபகரணம் (**Filter**) பொருத்தப்படும்.

வெப்ப வலயப் பிரதேசங்களில் இவ்வுபகரணங்களை வெப்பம் காரணமாகக் கழற்றி வைக்க முற்படுவதால் தகுந்த பாதுகாப்பைப் பெறமுடியாமல் போகலாம். எனினும் ஐரோப்பியக் காலநிலையில் தகுந்த பாதுகாப்பைப் பெறமுடியும். ஏனைய பாதுகாப்பு முறைகளாக இரசாயன ஆயுத எச்சரிக்கைக் கருவிகள், மருந்துகள் என்பன மூலமும் ஓரளவு பாதுகாப்பைப் பெறமுடியும்.

இப்படியான பாதுகாப்பு நடவடிக்கைகளை எதிரியை எடுக்க வைத்து எதிரிப்படைக்கு மேலதிக சிரமத்தை வழங்குவதன்மூலம் அவர்களின் செயற்பாட்டைக் கட்டுப்படுத்தலாம்.

**எஸ்.பி.வாகீசன்**

## சின்னஞ் சிறு செய்திகள்

### விபத்தில் இருவர் காயம்

(நவிண்டில்)

மாலிசந்தி வீதியில் - மந்திகைச் சந்திக்கு அருகாமையில் ஓட்டோவும், பஸ் வண்டியும் மோதிக்கொண்டதில் கரவெட்டி மேற்கைச் சேர்ந்த ஓட்டோ சாரதியான எஸ். வசீகரன் (வயது 25) என்பவரும் ஓட்டோவில் பயணம் செய்த வதிரியைச் சேர்ந்த எஸ். தங்கம்மா (வயது 73) என்பவரும் பலத்த காயங்களுக்குள்ளாகி மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இச் சம்பவத்தில் ஓட்டோவும் பலத்த சேத்திற்குள்ளாகியது.

(116)

### பனடோலுக்கு தட்டுப்பாடு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் மீண்டும் பனடோல் மாத்திரைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கின்றது. இதனால் சிகிச்சைக்காக இங்கு செல்லும் நோயாளர்கள் பனடோலைத் தனியார் மருந்தகங்களிலேயே வாங்க வேண்டியிருப்பதாகவும் தெரியவருகிறது.

### நெல்லியடியில் சமுர்த்தி வங்கி

(கரவெட்டி)

கரவெட்டிப் பிரதேச செயலகப் பிரிவின் நெல்லியடி சமுர்த்தி வங்கித் திறப்புவிழா நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கனகராயன் குளத்தில் 373 குடும்பங்கள் குடியமர்வு

(கிளிநொச்சி)


வவுனியா கனகராயன் குளத்தில் இருந்து இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்து சென்ற 373 குடும்பங்கள் மீளக் குடியமர்ந்திருப்பதாக அப்பகுதி கிராம அலுவலர் தெரிவித்தார்.

1997ஆம் ஆண்டில் ஜெயசிக்குறு படை நடவடிக்கையால் கனகராயன் குளம் பகுதியில் குடியிருந்த 530 குடும்பங்கள் இடம் பெயர்ந்து சென்றமை குறிப்பிடத்தக்கது.

(34)




# ஐ.சி.சி. உலகக் கிண்ணம் - 2003




## கென்யா போராடுமா...?



டிக்கோலோ - தனித் தவில்

இன்று இலங்கை அணிக்கு கென்யாவுடன் NAIROBI GYMKHANA CLUB மைதானத்தில் ஆட்டம் நடைபெறப்போகின்றது. இலங்கை அணி இலகுவாக மேலும் நான்கு புள்ளிகளுடன், மொத்தம் 16 புள்ளிகளைப் பெற்றுவிடும் என்ற முன்கூட்டியதான கணிப்பு பலரிடமும் நிலவி வருகின்றது.

நியூசிலாந்து அணியுடன் சற்றுப் போராடி வென்றது இலங்கை அணி. (ஆனாலும் - இங்கு பின்வரிசை ஆட்ட வீரரும் பந்துவீச்சாளருமான ஸ்டைரிஸ் இலங்கையின் பந்து வீச்சாளர்கள் அத்தனை பேருக்கும் சிம்ம சொப்பனமாக இருந்து, ஐந்து சிக்ஸர்கள் உள்ளடங்கலாக 141 ரன்களைக் குவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது).

அடுத்து பங்களாதேஷ், கனடா ஆகிய இரண்டு அணிகளுடன் விளையாடிய இலங்கை அணி இலகுவாக அப்போட்டிகளிலும் வென்றது.

சமிந்த வாஸுடன் இலங்கை அணி உலக சாதனையை நிலை நாட்டியது.

இப்படிப்பட்ட அணிகள் இலங்கை அணியுடன் விளையாடும்போது இவ்வளவு விரைவாகச் சுருண்டு போகின்றனவென்றால், இதற்குரிய காரணந்தான் என்ன....?

உலகத்தில் பேசப்படும் முத்தையா முரளிதரன் மற்றும் சமிந்த வாஸ் போன்ற வீரர்களுடன் எப்படி முகம் கொடுப்பது இச்சிறிய அணிகள். தாங்கி நிலைக்கக்கூடிய சக்திகளைக் கொண்டிருக்கின்றோமா என்ற தாழ்வுமனப்பான்மையுடன், முன்கூட்டியே பயந்து, மிரண்டு, இறுதியில் துவண்டு, தலைகுனிந்து செல்கின்ற அந்த உளவியல் தாக்கமும் அதனால் ஏற்படுகின்ற விளைவுகளையுந்தான் நாம் இந்த அணிகளிடம் காண்கின்றோம்.


இதற்காக இலங்கை அணியின் திறமையைக் குறைத்துக் கூறுவது உசிதமல்ல. இருந்தாலும் அவர்களின் திறமையைவிட இப்படிப்பட்ட அணிகள் உளவியல் ரீதியில் பயந்து கொள்வதே, இப்படிக் குறைந்த எண்ணிக்கையில் துவண்டு போவதற்குக் காரணம் என்று சிலர் கூறுவதையும் மறுக்கமுடியாது. இதற்காக இப்படிப்பட்ட பின்வரிசை அணிகள் முதலில் உளவியல் ரீதியிலும் பலம் பெறுவது முக்கிய கடப்பாடாகும்.

ஆனால், இன்று நடக்கும் கென்யாவுடனான ஆட்டம் நிச்சயமாக இலங்கை அணியும் ஏனைய சிலரும் நினைப்பதுபோல் - இலகுவாக, வெல்லக்கூடிய ஒன்றல்ல.

பங்களாதேஷ், நெதர்லாந்து, நமீபியா, கனடா ஆகிய இத்தனை அணிகளையும்விட, தற்போது கென்ய அணி பலப்படுத்தப்பட்டிருப்பதுடன் - டிக்கோலோ, ஒடும்பே போன்ற பல திறமையான வீரர்களையும் கொண்டுள்ளதால், இலங்கை அணி சற்றுப் போராட வேண்டிய நிலையே ஏற்படலாம். அல்லது இலங்கை அணி எதிர்பார்க்கும் வெற்றிக் கனவு நனவாகாமலே போய் விடலாம். இதற்குச் சந்தர்ப்பம் குறைவாகவிருந்தாலும், கிரிக்கெட் எதையும் தலைகீழாக மாற்றிவிடும் விளையாட்டல்லவா?

- வி.ஏ.கோவி.


### நேற்றைய ஆட்டங்களிலிருந்து...






① 67 பந்துகளில் டேவிசனின் அபார சதம்.

② டிரேக்ஸ் - இப்படியும் ஒரு பிடி.





சதமடித்த இந்திய வீரர்கள்.

## நாளும் ஒரு வினா

உலகக் கிண்ணப் போட்டிகளில் அதிகூடிய இணைப்பாட்டமாகக் கருதப்படுவது எது?

**318 - கங்கூலி 183, திராவிட் 135 - எதிர் இலங்கை**

## Tip Top ஆசாமிகள்



டெண்டுல்கர் - ESPN - STAR இன் அடிமை

கிரிக்கெட் ஆட்டங்களில் விளம்பரங்களின் முக்கியத்துவம் விஷம் போல் பரவி வருவது யாவரும் அறிந்ததே. இந்த விளம்பரங்கள் கிரிக்கெட் வீரர்களின் மோகத்தைத் தூண்டி, இன்று அணிகளின் வெற்றியை மறந்து தத்தம் சொந்த உழைப்பைக் கருதும் அளவுக்குத் தூண்டியிருக்கின்றது என்றால் அது மிகையில்லை.

இந்த விளம்பரங்களை உலகுக்கு எடுத்துக்காட்டும் முக்கியமான தகவல் தொடர்பு சாதனமாக, தொலைக்காட்சிப் பெட்டி விளங்குகிறது. கிரிக்கெட் ஆட்டங்களை நேரடி ஒளிபரப்புச்செய்து, அதன் மூலம் விளம்பரங்களை இடையிடையே செருகி, தொலைக்காட்சி நிறுவனங்களும் வருமானம் பெற்று அத்துடன் கிரிக்கெட் வீரர்களையும் குழப்பிவருகின்றன.

ஆனால், இந்தத் தகவல் தொடர்புசாதனத்தினால் கிடைக்கக் கூடிய ஒரே ஒரு நன்மை நேரடி வர்ணனை. கடந்த காலங்களில் ஒரு ஒப்புக்கு மட்டுமே செய்யப்பட்ட நேரடி வர்ணனை, இன்று எல்லாக் கிரிக்கெட் ரசிகர்களாலும் வரவேற்கப்படுகின்ற அளவுக்குப் பெரிதாகத் தோற்றம் பெற்றுள்ளது. இப்படி நாங்கள் நோக்கும்பொழுது, நேரடி வர்ணனையாளர்களையும் நோக்க வேண்டும்.

பொதுவாக கிரிக்கெட் ஆட்டங்களில் ஈடுபடுகின்ற எல்லா நாட்டிலிருந்தும் வர்ணனையாளர்கள் அழைக்கப்படுவது வழமை. இன்று உலகத்திலே எந்த மூலையில் கிரிக்கெட் போட்டிகள் நடைபெற்றாலும் அதனைத் துல்லியமாகத் தருவதில் (ESPN - STAR) கூட்டு நிறுவனம் முன்னணியில் நிற்கின்றது. அத்துடன் **Sky Sports, Worldtel** ஆகிய நிறுவனங்களும் இருக்கின்றன.

இனி ஒவ்வொரு வர்ணனையாளர்களையும் தனித்தனியே நோக்குவோம். வர்ணனை உலகின் சக்கரவர்த்தி என்று கூறக்கூடிய ரொனி கிரேக், மிகவும் அற்புதமான வர்ணனையாளர். அவர் தருகின்ற தொடர்ச்சியான நேரடி வர்ணனைக்கு நிகர் அவர்தான்.

அவரின் ஆங்கில உச்சரிப்பு ஆசிய நாட்டுக் கிரிக்கெட் ரசிகர்களும் விளங்கிக்கொள்ளும் அளவுக்கு இருக்கிறது. இவரின் குறைபாடு - இலங்கை அணியைச் சற்றுத் தூக்கிச் சொல்லுவது. ஜெவ் பொய்கொட்டின் ஆங்கில உச்சரிப்பு கடினம். ஆனால், **Pitch report** சொல்வதில் வல்லவர். நகைச்சுவை மன்னன். இவருடைய பலவீனம் பரபரப்பு.

மைக்கல் ஹோல்டிங் - தடிப்புப் பொருந்திய ஆங்கில உச்சரிப்பு. நடுநிலையுடன் கூடிய, மிகவேகமான வர்ணனை. பந்துவீச்சாளர்களைப் பற்றி இவருடைய வர்ணனையில் அதிகமாக விமர்சிப்பார்.

ரவி சாஸ்திரி, ஆசிய நாட்டின் அற்புதமான வர்ணனையாளர். ஆங்கிலேயர்களுக்கு நிகரான வர்ணனை. பார்வையாளர் பக்கம் அதிகம் கண்களைச் செலுத்துவது இவருடைய குறைபாடு. விளம்பரப் பிரியன்.



ரொனி கிரேக், ரவி சாஸ்திரி - நீயா? நானா?



போய்கொட் - Style மன்னன்

ரமீஸ்ராஜா - எப்படி இவ்வளவு தூரம் முன்னேறினார் என்று ஆச்சரியப்படும் அளவுக்கு அவரது வர்ணனை இருக்கின்றது. பாகிஸ்தான் அணியை அக்குவேறு ஆணிவேறாகக் கழற்றுவதில் வல்லவர். அனுபவம் இன்னும் தேவை.

ரஞ்சித் பர்ணாந்துவை விட இலங்கையில் ஆட்கள் இல்லையா? சுமாரான வர்ணனை. இலங்கை அணியைப் புகழ்ந்துபாடும் தன்மை. திருந்த இடமுண்டு.

தனியே வர்ணனை மட்டும் இல்லாமல், இந்த வர்ணனையாளர்கள் - **Pitch report, Weather report, Tos-sing, Presention** ஆகியவற்றுக்கெல்லாம் பயன்படுத்தப்படுகின்றார்கள்.

இவர்களும் கிரிக்கெட் ஆட்டக்காரர்களுக்கு நிகராகச் சம்பாதிக்கின்றார்கள். இவர்களின் முதல் எதிரிகள்- மத்தியஸ்தர்கள், அடுத்து கிரிக்கெட் ஆட்டக்காரர்கள்.

இவர்கள் வர்ணனையின் போது மத்தியஸ்தர்களைப் படுத்தும்பாடு இருக்கின்றதே. அது மிகவும் கவலைக்குரியது. அணிகள் வென்றால் புகழுவார்கள், தோற்றால் மரமேறி விழுந்தவனை மாடு மிதித்தது போல இகழுவார்கள்.

ஆனால், இவர்களுடைய உதவி இல்லாவிட்டால் அசோக டீ சில்வா போன்ற மத்தியஸ்தர்களைத் திருத்தவும் முடியாது. என்றாலும்- வர்ணனையாளர்களும் கொஞ்சம் அடக்கி வாசிக்கலாமே?

**PN. சுதர்சன்**

## உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003

### கனடா எதிர் மேற்கிந்தியத்தீவுகள் அணி

#### கனடா அணி

| | | |
|---|---|---|
| மராஜ் | C ஹு°ப்பர் b கொலின்ஸ் | 16 |
| டேவிசன் | C டிரேக்ஸ் b ஹின்ட்ஸ் | 111 |
| சம்னி | C கைல் b ஹின்ட்ஸ் | 19 |
| பில்கிளிவ் | C ஜேக்கப்ஸ் b டிரேக்ஸ் | 16 |
| இஃபில் | C ஜேக்கப்ஸ் b டிரேக்ஸ் | 09 |
| ஹரிஸ் | C ஹு°ப்பர் b டிரேக்ஸ் | 06 |
| டி குருட் | run out | 11 |
| பகாய் | run out | 02 |
| கொட்ரிங்டன் | C ஜேக்கப்ஸ் b டிரேக்ஸ் | 00 |
| சீபாரன் | LBW b டிரேக்ஸ் | 00 |
| ஜோசப் | not out | 00 |
| உதிரிகள் | | 12 |
| சகல விக்கெட்டுக்களும் இழந்து (42.5 ஓவர்கள்) | | 202 |

#### பந்து வீச்சு - மேற்கிந்தியத்தீவுகள் அணி

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| டிலோன் | 5 | 0 | 41 | 0 |
| கொலின்ஸ் | 7 | 1 | 35 | 1 |
| டிரேக்ஸ் | 9.5 | 1 | 44 | 5 |
| ஹு°ப்பர் | 8 | 1 | 31 | 0 |
| கைல் | 9 | 1 | 29 | 0 |
| ஹின்ட்ஸ் | 4 | 0 | 19 | 2 |

#### மேற்கிந்தியத்தீவுகள் அணி

| | | |
|---|---|---|
| கைல் | C பகாய் b ஜோசப் | 08 |
| ஹின்ட்ஸ் | C பகாய் b டேவிசன் | 64 |
| லாறா | b டி குருட் | 73 |
| சர்வான் | not out | 42 |
| ஹு°ப்பர் | not out | 05 |
| உதிரிகள் | | 14 |
| 3 விக்கெட் இழப்புக்கு (20.3 ஓவர்கள்) | | 206 |

#### பந்து வீச்சு - கனடா அணி

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| ஜோசப் | 4 | 0 | 47 | 1 |
| கொட்ரிங்டன் | 4 | 0 | 25 | 0 |
| இஃபில் | 4 | 0 | 46 | 0 |
| சீபாரன் | 1 | 0 | 26 | 0 |
| டேவிசன் | 5 | 0 | 36 | 1 |
| டி குருட் | 2.3 | 0 | 21 | 1 |

கனடா அணியை மேற்கிந்தியத்தீவுகள் அணி 07 விக்கெட்டுக்களால் வென்றது.

கனடா அணியின் டேவிசன் உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டியொன்றில் ஆகக்குறைந்த பந்துகளில் (67) சதமடித்தது இன்றைய ஆட்டத்தின் சிறப்பம்சம்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# நல்லூரில் சமாதான நீதிவான்கள் நேற்று உண்ணாவிரத போராட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சமாதான நீதிவான் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று நல்லூர் ஆலய வீதியில் உண்ணா விரதம் அனுஷ்டிக்கப்பட்டது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்து ஒரு வருடம் பூர்த்தியான நிலையிலும், ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் நடைமுறைப்படுத்தப்படாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், அதனைக் கண்டித்தும் இந்த உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது.

நேற்றுக்காலை 9 மணிக்கு நல்லூர் வடக்கு வீதியில் இதற்காக அமைக்கப்பட்ட விசேட பந்தலில் இந்த உண்ணாவிரதப் போராட்டம் யாழ். மாவட்ட சமாதான நீதிவான்களின் சங்கத்தின் தலைவர் க.நாகராசா தலைமையில் ஆரம்பமாகியது.

குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பெருந்திரளான மக்கள் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் உணர்வுபூர்வமாகப் பங்குபற்றினர்.

சமாதான நீதிவான்கள், வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியப் பிரதிநிதிகள், மாணவர்கள், பொது நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்து ஒருவருடம் பூர்த்தியடைந்த போதிலும், ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் எதுவும் நடைமுறைப்படுத்தப்படாததைக் கண்டித்து அங்கு பலரும் உரையாற்றினர்.



அத்துடன், "அரசே, படைகளே - புலிகளைத் சீண்டி போரை மூட்டாதே," "ஒப்பந்தம் வந்தும் எமக்கு இன்னமும் இயல்பு வாழ்க்கை ஏற்படவில்லை" என்பது போன்ற பல்வேறு சுலோகங்களையும் தாங்கியிருந்தனர்.

பி.ப 2.00 மணிவரை நடைபெற்ற இந்த உண்ணாவிரதப் போராட்டத்தின் முடிவில், இதில் கலந்து கொண்டவர்களுக்கு யாழ். மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சூ.சிறில் குளிர்பானங்களை வழங்கி உண்ணாவிரதத்தை நிறைவு செய்து வைத்தார். (ச)

## உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003 இன்றைய ஆட்டம்

ICC Cricket World Cup South Africa 2003

சிம்பாப்வே Vs அவுஸ்திரேலியா - Queens Ground, Bulawayo -1 .30 pm.
இலங்கை Vs கென்யா - Gymkhana Club, Nairobi -1.30 pm

# சர்வ மதத் தலைவர்களிடம் மகஜர் கையளிக்க ஏற்பாடு

தெற்கிலிருந்து இன்று யாழ்ப்பாணம் விஜயம் செய்யும் பௌத்த பிக்குகள் உள்ளிட்ட சமயத் தலைவர்களுக்கு கைதடியில் மதியபோசனம் வழங்கப்படவுள்ளது.

இம் மதத்தலைவர்கள் குழுவினர் மாலை நல்லூர், நல்லை ஆதீனத்தில் நடைபெறவிருக்கும் சர்வ மதத் தலைவர்களுக்கான சந்திப்பில் கலந்துகொள்ளவுள்ளனர்.

இச் சந்திப்பின்போது, குடாநாட்டில் செயற்படும் பொது அமைப்புகள் யாவும் மதத் தலைவர்களிடம் மகஜர்களைக் கையளிக்கவுள்ளன.

# தொழில்வாய்ப்பு இல்லாதோரை பதிவு செய்யும் பணிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தொழில் வாய்ப்புக்களை எதிர்பார்த்திருக்கும் இளைஞ், யுவதிகளைப் பதிவு செய்யும் நடவடிக்கைகளை யாழ்.தொழில் திணைக்களம் மீண்டும் ஆரம்பித்திருக்கிறது.

எதிர்காலத்தில் அரச மற்றும் தனியார் துறைகளில் ஏற்படுகின்ற பதவி வெற்றிடங்களுக்கு- புதிய நியமனம் வழங்கும்போது இவர்களது பதிவுகள் கவனத்தில் எடுக்கப்படும்.

மேற்படி பதிவுகள் யாவும் தற்போது பிரதேச செயலர் பிரிவுகள் ரீதியாகவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## விபத்தில் போராளி சாவு

முல்லை மாவட்டத்தில் ஏற்பட்ட தவறுதலான வெடிவிபத்தின் போது, போராளி ஒருவர் நேற்றுமுன் தினம் சாவடைந்துள்ளதாகப் விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

கரடிக்குண்டு, நாச்சிக்குடா, மன்னாரைச் சொந்த முகவரியாகவும், மாதகல், யாழ்ப்பாணத்தைத் தற்போதைய முகவரியாகவும் கொண்டவரான, மேஜர் கதிரொளி (கிருஷ்ண பவான் சசிகுமார்) என்ற போராளியே சாவடைந்தவராவார்.

இவருக்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.இவரது வீரவணக்கக் கூட்டம் இன்று காலை 11 மணிக்கு சென்.ஜேம்ஸ் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

# நிந்தவூரில் பொலிஸார் சுட்டு முஸ்லிம் இளைஞர் காயம்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் உள்ள நிந்தவூரில், நேற்றுமுன்தினம் பொலிஸாருக்கு எதிராக எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட பொதுமக்கள் மீது- பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் முஸ்லிம் இளைஞர் காயமடைந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு இந்தப் பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த ஒருவர் பலியானார். மற்றொருவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் குறித்து நேரில் சென்று விசாரணை செய்த பொலிஸார் விசாரணையின் பின்பு, விபத்துக்குக் காரணமான லொறியை பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் செல்ல முற்பட்ட சமயம்- பொதுமக்கள் லொறி மீதும், பொலிஸார் மீதும் கற்களை வீசி எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதனைத்தடுக்கப் பொலிஸார் முற்பட்டதாகவும், இந்தச் சமயத்தில்தான், தாம் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறிப்பிட்ட சம்பவத்தில் பொலிஸார் ஒருவர் கல்வீச்சில் காயமடைந்தார் எனவும் பொலிஸ் தரப்பில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (07)

# எட்டு கத்தோலிக்க ஆயர்கள் இன்று யாழ். வருகின்றனர்!

கத்தோலிக்கத் திருச்சபையின் எட்டு மறை மாவட்டங்களின் ஆயர்கள், இன்று யாழ்ப்பாணம் விஜயம் செய்கின்றனர்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னர், பல மறை மாவட்டங்களின் ஆயர்கள் ஒன்றியம் இணைந்து யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்வது இதுவே முதற்தடவையாகும். நாளை மாலை யாழ்.கொட்டடியில் நடைபெறவிருக்கும் ஜோசப் வாஸ் முனிவரின் தேவாலயத் திறப்பு விழாவில் இவர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். (க)

## புலிகளுடன்...

அரசியல் விடயங்கள் தொடர்பாகவும், மக்கள் எதிர்நோக்கும் அடிப்படைப் பிரச்சினைகள் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டது.

குறிப்பாக, புரிந்துணர்வு உடன்படிக்கை ஒரு வருடத்தை பூர்த்தி செய்துள்ள நிலையில் தற்போதைய அரசியல்நிலை குறித்தும் கலந்துரையாடப்பட்டதோடு, ஒப்பந்தம் தொடர்பான மீள் மதிப்பீடும் செய்யப்பட்டதாகத் தெரியவருகின்றது.

இதேவேளை - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் விடுதலைப் புலிகளும் அரசியல்ரீதியாக செயற்படுவதற்கு வசதியாக தேசிய மட்டத்தில் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற சந்திப்பின்போது, மேற்படி தேசிய மட்டக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே, மாவட்ட மட்டத்தில் இவ்வாறான குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் வீ.ஆனந்தசங்கரியைத் தவிர்ந்த ஏனைய தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

## கூட்டுப்....

பயிற்சிகள் நடத்துவது பற்றியும் இவர்கள் இந்திய அதிகாரிகளுடன் ஆராய்வார்கள் எனத் தெரிவிக்கப் படுகின்றது.

இந்திய இழுவைப்படகுகள் இலங்கையின் கடல் எல்லைகளை மீறுவது பற்றியும், இந்திய அதிகாரிகளுடன் இலங்கைக் கடற்படையதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்துவர் எனத் தெரியவருகின்றது.

## மக்கள்...

போட்டுத் தேடுதல் நடத்தினர்.

இத்தேடுதலின்போது, அங்கு மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள் மற்றும் கடற்படையினரின் சீருடை ஆகியவை மீட்கப்பட்டன.

ரி-56 ரக துப்பாக்கிகள்-06, அதற்குரிய மகசீன்கள்-24, துப்பாக்கி ரவைகள்-740, கைக்குண்டு-01, தொலைத் தொடர்புக் கருவி-01, கடற்படையின் சீருடை-01, பொலிஸ் தொப்பிகள்-02 ஆகிய இராணுவப் பொருட்கள் அங்கிருந்து மீட்கப்பட்டன.

மீட்கப்பட்ட பொருட்கள் பொலிஸாரின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகளைத் தாம் முடுக்கி விட்டிருப்பதாக, யாழ். மாவட்டப் பொலிஸ் தலைமையகப் பிரதம பொலிஸ் பரிசோதகர் எஸ்.கே.ஆனந்த செனவிரட்ண தெரிவித்தார்.

ஈ.பி.டி.பியிலிருந்து பிரிந்துசென்ற முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான இராமேஸ்வரன், இராமமூர்த்தி சகோதரர்களால், மக்கள் ஜனநாயகப் பேரவை என்ற அரசியற் கட்சி அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# 181 ஓட்டங்களால் இந்திய அணி வெற்றி

உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டியின் நேற்றைய ஆட்டத்தில் நமீபிய அணியை, இந்தியா 181 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி, 2 விக்கெட் இழப்புக்கு 311 ஓட்டங்களைக் குவித்தது. சச்சின் 151 பந்துகளில், 18 பவுண்டரிகளுடன் 152 ஓட்டங்களையும், கங்கூலி 4 சிக்ஸர்கள், 6 பவுண்டரிகளுடன் 112 ஓட்டங்களையும் பெற்றனர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய நமீபிய அணி, 42.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 130 ஓட்டங்களையே பெற்றது.

இந்திய அணியின் வீரர் யுவராஜ்சிங் 6 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். ஷாகிர் கான், ஹர்பஜன் சிங், மொங்கியா ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

# மின்னொளியில் நேற்று நடைபெற்ற கரப்பந்தாட்ட, வலைப்பந்தாட்ட போட்டி

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் நேற்றிரவு மின்னொளியில் - கரப்பந்தாட்டம் மற்றும் வலைப்பந்தாட்டப் போட்டிகள் நடைபெற்றன.

மட்டக்களப்பு அணிக்கும் யாழ். அணிக்கும் இடையில் நடைபெற்ற வலைப்பந்தாட்டப் போட்டியில் - யாழ். அணி 54:19 என்ற அடிப்படையில் வெற்றிபெற்றது.

இந்நிகழ்வில் யாழ். அரசியற்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழ் விழி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

கிளிநொச்சி அணிக்கும் மன்னார் அணிக்கும் இடையில் நடைபெற்ற கரப்பந்தாட்டப் போட்டியில், மன்னார் அணி 25:21, 20:25, 25:19, 25:13 என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது. இதில் சார்ள்ஸ் அன்ரனி சிறப்புப் படைப்பிரிவின் தளபதி கோபித் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

## நெடுந்தீவுக்கு...

யாழ். மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெயசேகரா ஆகியோர் நெடுந்தீவுக்குச் சென்றனர்.

இவர்கள் நெடுந்தீவுப் பிரதேச சபைக்குச் சொந்தமான பிக்கப் மூலம் நெடுந்தீவில் தங்கியுள்ள கடற்படையின் முகாமுக்கும், பொலிஸ் நிலையத்துக்கும் விஜயம் செய்து அங்கு கலந்துரையாடல்களை நடத்தினர்.

இதையடுத்து, நெடுந்தீவு மகா வித்தியாலய மைதானத்திற்கு வந்த போது, அப்பகுதி மக்கள் ஒன்றுகூடினர். அமைச்சர் மிலிந்த தலைமையிலான குழுவினரிடம், நெடுந்தீவுப் பகுதி மக்கள் - அங்குள்ள ஈ.பி.டி.பியினரை வெளியேற்ற நடவடிக்கை எடுக்குமாறும், நெடுந்தீவுப் பிரதேச சபைக் கட்டடம் மற்றும் நூலகத்தில் முகாமிட்டுள்ள கடற்படையினரையும், பொலிஸாரையும் வெளியேற்ற நடவடிக்கை எடுக்குமாறும் கோரிக்கை விடுத்தனர்.

அத்துடன், நெடுந்தீவுக் கடலில் நேற்றுமுன்தினம் மீனவர்கள் தாக்கப்பட்ட சம்பவம் குறித்தும், இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் குறித்தும் நெடுந்தீவு மக்களால் அமைச்சர் மிலிந்த மொறகொட தலைமையிலான குழுவினரிடம் எடுத்துக் கூறப்பட்டது.

பி.ப 2.30 மணியளவில் இரண்டு உலங்கு வானூர்திகள் மூலம் இக் குழுவினர் நெடுந்தீவிலிருந்து புறப்பட்டுச் சென்றனர். (113)

## திருமலையில்...

தாம் மோதுவதற்குத் தயாராவோம் எனப் போராளிகள் எச்சரித்தனர்.

இதனால், அங்கு நிலைமை பதற்றமடைந்தது. எனினும், கடற்படையினர் தமது சுற்றிவளைப்பைத் தளர்த்தவில்லை.

இப்பகுதி புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதியானது என்பதால் - தமது சகபோராளிகள், கடற்படையினரால் சுற்றிவளைக்கப்பட்டிருப்பதை அறிந்த - பெருந்தொகையான போராளிகள் அவ்விடத்திற்குச் சென்று - கடற்படையினரைச் சுற்றி வளைத்தனர்.

இதேவேளை - இச்சம்பவம் தொடர்பாக அறிந்த போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரும், விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் திலக்கும் - அவ்விடத்திற்குச் சென்றனர்.

கண்காணிப்புக்குழு இரண்டு தரப்பினருடனும் உரையாடி - இரு தரப்பினரையும் விலகிச் செல்லுமாறு கேட்டுக்கொண்டது.

இதன்படி - விடுதலைப் புலிகளும் கடற்படையினரும் நடந்து கொள்ள - எட்டு மணித்தியாலங்களாக நீடித்த கலவரமான சூழ்நிலை இரவு 8.30 மணியளவில் சுமுகமாகத் தணிந்தது.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 24.02.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.